உ

சிவமயம்.

செங்கல்பட்டு ஜில்லா பொன்னேரி
தாலூக்காவைச் சேர்ந்த விச்சூர் கிராமத்தில்
திருக்கோயில்கொண் டெழுந்தருளியிராநின்ற

உலகமாதா, பெரியண்ணன், சின்னண்ணன் சரித்திரம்.

—o—

சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி
ஆலய தர்மகர்த்தர் ஆ. முனுசாமி உபாத்தியாயர்
மாணவரில் ஒருவராகிய செங்கல்பட்டு அருணகிரி நாட்டார்
குமாரர் கிருஷ்ணம்பேட்டை
செ. சின்னப்ப நாட்டார் அவர்களால்
இயற்றியது.

நெல்லி அப்பாசாமி உடையார் மாணவராகிய
கிருஷ்ணங்குளம் தமிழ்ப்பண்டிதர்
சிவப்பிரகாச முதலியாரவர்களால்
பரிசோதிக்கப்பட்டது.

சென்னை, அரண்மனைக்காரன் வீதி,
கார்லண்டு & கோ., அச்சுக்கூடத்தில் பதிவு செய்தது.

ரிஜிஸ்டர்ட்] 1931 [விலை அணா 6.

உ

பராசக்தியே நம:



சென்னை சிந்தாதிரிப்பேட்டை
ஸ்ரீ பராசக்தி பீடத்தில் திருக்கோயில்கொண்
டெழுந்தருளிய

ஸ்ரீ அங்காள பரமேஸ்வரியார்.

கங்காள மணிந்தவளைக் கபாலங்
தரித்தவளைக் காளச்சோதி
பங்காளவளர் கோடியைக் காரணியை
யுலகமெல்லாம் பறித்தகோம்பை
யிங்காள வரும்பரையை யெழிற்ச்
சிந்தாதிரிப்பேட்டையில் வாழ்
அங்காள ஈஸ்வரியைக் கண்டு பணிந்தேப்
பேறுமடைவாம் வாரீர்.

முகவுரை.

சிவநேசச் செல்வர்களே!

இந்த சரித்திரமானது அன்பர்களின் வேண்டு கோளுக்கிணங்கி அநேக வருடங்களாக ஆங்காங்கு தேடி அகப்படாது முடிவில் எனது நண்பர் மூலமாய் மதுரையில் கிடைத்த சில ஏடகச் சுவடியில் வரைந்துள்ள சுருக்கத்தை என் அறிவுக்கு எட்டின வரையிலும் சீர்திருத்தி இவ்வுலகம் அறியும்வண்ணம் எளிய நடையில் இச்சரிதையை வெளியிடப்பட்டது. இதில் பிழையுளதேல் அன்பர்கள் பொறுத்து ஆதரித்து இது போன்ற வேறு பல நூல்களையும் வெளியிட ஊக்கமளிப்பார்களென்ற முழு நம்பிக்கையுடன் எல்லாம் வல்ல இறைவனடியைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
செ. சின்னப்ப நாட்டார்.

நெல்லி அப்பாசாமி யுடையார் மாணவரில் ஒருவ ராகிய கிருஷ்ணங்குளம் தமிழ்ப்பண்டிதர்
திரு. சிவப்பிரகாச முதலியார் இயற்றிய
சாற்றுக்கவி.

பேருபெருகும் செங்கற்பெட்டான்
பிறபலத்தோன் அருணகிரி நாட்டான்
சீர்பெருகும் சுதனய் வந்த சிரியன்
சின்னப்பன் வள்ளல்
பார்தனிலே சிவனடியார்க்கு அன்பு பூண்டோன்
பருவதராஜ குலத்திவுதித்தோன்
ஆர்பெருகும் அவனியில் வந்து வுதித்து
அண்ணனுடைய சரிதையை அரிக்கலிற்றுன்.

உ

சிவமயம்.

செங்கல்பட்டு ஜில்லா, பொன்னேரி தாலுக்காவைச் சேர்ந்த விச்சூர் கிராமத்தில், திருக்கோயில்கொண் டெழுந்தருளியிரா நின்ற

உலகமாதா, பெரியண்ணன், சின்னண்ணன்

சரித்திர வரலாறு.

விநாயகர் காப்பு.

வெண்பா.

சீராரு மண்ணன்மார் சீர்த்திதனைப்பாட
பேரார் விநாயகரே வீடுபெற—ஏராரும்
காத்து நீ ரட்சிப்பாய் காதலுடனெப் போதும்
நாத்தழும்பாய் போற்றிடுவோம் நாம்.

அநேகமாயிரந் திருநாமமுடையதும், ஆதிசேஷனால் அளவிடக்கூடாததுமான மதுரைமா நகரத்தை பரிபாலனஞ் செய்யா நின்ற கூன்பாண்டியன் அரசியற்று நாளில் சமணம், சாக்கியம், புத்தம், பௌத்தம் முதலிய மதங்கள் இம் மதுரையின்கண் எழுந்து, முதற்கூறிய சமண மதமானது கூன்பாண்டியனை முதலில் தன் வசப்படுத்தியது. பாண்டியனானவன் தன் அமைச்சனாகிய குலசேகரரை அழைப்பித்து மந்திரி நம் தேசத்தை சேர்ந்த சகலரிலும் எவரானாலுஞ் சரி நெற்றியில் விபூதி இடுகிறவர்களையும், ருத்திராக்ஷ மாலைகள் தரிப்பவர்களையும், ஈசன் ஆலயஞ் சென்று துதிப்போரையும், கழுவேற்றப்படுமென்று ஐம்பத்தாறு தேசங்களுக்கும் பறை சாற்றுவாயென்ன கடினமுறையுள்ள வேந்தன் கட்டளையிட, அறிவிற் சிறந்த அமைச்சன் நடுக்கமுற்றவனாய் மன்னன் பத்தினி மங்கையர்க்கரசியின்பால் சென்று அரசனுரைத்த விஷமொழிகளை விரித்துரைக்கவும் மங்கையர்க்கரசி மனந்தடுமாறி மூர்ச்சையடைந்ததை மந்திரி கண்ணுற்று மனக் கலக்கத்துடன் மன்னன் ஆக்கினைப்படி காவலர் மூலமாய் நகரெங்கும் பறைசாற்ற, காதுற்ற மதுரை முதலிய நகர

வாசிகள் பெருந் திகிலடைந்து ஈசனே கூக்குரலிட்டு ஏங்கி மனது வாடி சமணராய் சேர்ந்து அம்மதத்தை நாளுக்குநாள் பின்பற்றலானுர்.

தண்டோரு தடைப்படி ஈசன் ஆலயமெல்லாம் அடைத்து தாளிட்டு சமண மதம் காட்டுத் தீபோல் பரவின. நிற்க சில ஆண்டுகள் கழிந்த பின்னர் சோமசுந்திர பெருமானருளால் சைவசைமயாசிரியர் நால்வரையும் உற்பவிக்க செய்தார். அதில் நடுநாயகமாய் சுப்ரமண்யர் அம்ஸமாகிய ஆளுடையப் பிள்ளையார் சீர்காழியில் கவுணிய கோத்திரத்தில் சிவபாதவிருதயருக்கும் பகவதியாருக்கும் வந்துதித்தார். உதித்த மூன்ருவதாண்டில் தன் தந்தையார் குளக்கரைக் கேகுமளவில் தனயனும் தானுந் தொடர நோக்கத்தையறிந்த தந்தை தன் செல்வத்தை தன் புஜத்தின்மேல் ஏற்றி தோணியப்பர் குளக்கரையடைந்த தனயனே கரையின்மீது அமர்த்தி தான் வாவியில் சென்று நேமநிஷ்டை முடிக்குமளவில் அக்குழந்தை தன் பிதாவைக் காணுது எதிர் தோன்றிய தோணியப்பர் சிகரத்தை கண்டு அம்மையே அப்பா வென்றழுக, அத்தோணியப்பர் அம்மையின் வசமாய் குழந்தைக்கு ஞானப்பாலே ஊட்ட கட்டளேயிட உமையவள் பொற்கிண்ணத்தில் ஞானப்பாலமைத்து குழந்தைக்கூட்டி மறைய பிதா குளத்தினின்றும் வெளியேறி தன் மகனேக்கண்டு எந்த சூத்திரன் பால் அருந்தினுனென்று சிறு தர்பையை எடுத்தோங்க அக்குழந்தை சிறு விரலேச் சுற்றி பால் அளித்த பரமன் திருக்கோபுரத்தைக்காட்ட தந்தை மனம் நடுங்கி அக்குழந்தையை அணேத்து எடுத்து தன் அகத்தை வந்தடைந்தனர். ஆளுடைய பிள்ளேயார் திருவிளேயாடலே கண்ட பதினுயிரம் திருக்கூட்டங்கள் சேர்ந்தன. திருநீலகண்ட நாயனுர் இவர் பாடும் பதிகங்களே தன் யாழியினிடமாக வாசித்திருந்தனர். பின்னர் பிள்ளேயார் சிதம்பரஞ் சென்று நடராஜப்பெருமானே தரிசித்து இன்னும் ஏனேய ஸ்தலங்களே தரிசித்து திருநெல்வாய் அரைத்துரைக்கி போகும்படி திரும்ப பிள்ளேயார் திருவடி வருந்த சிவபெருமானறிந்து பிள்ளேயாருக்கு முத்துச் சிவிகையும் முத்துக் குடையும் முத்துச் சின்னங்களேயும் பிள்ளேயாருக்கு அருள, பிள்ளேயார் பெருமானளித்த சிவிகையின்மேல் ஆரோகணித்து ஆலயந் தெரிசித்து தன் அருமை பித்ாவுக்கு யாகத்துக்கு பொன் வேண்டுமென்று பிதாவுடன் புரப்பட்டு திருப்பாச்சிலாச்சிரமத்துக் கெழுந்தருளும்போது அவ்வூர் அரசன் கொள்ளிமழவன் எதிர்

கொண்டழைத்து ஆலயத்தில் நுழைந்து அவ்விடம் முயலக நோயி ஞல் வருந்தி கிடக்கும் பெண்ணை பிள்ளையார் எழுப்பி பெருமானை தரிசித்து திருவாதுவை நோக்க, அவ்விடத்தில் பூதத்தினுல் அளிக்கப் பட்ட ஆயிரம் பொன்னையும் தந்தையின் யாகத்திற்கு ஒப்புவித்து திரு மரைக் காட்டில் அரவந்தீண்டி இறந்த வணிகனை யெழுப்பித்து, அப் பரைக்கண்டு உரவாடி இருக்கும் நாளையில், மதுரையில் சமணமதம் மூடிக்கொண்டதை மங்கையர்க்கரசியின் லிகிதத்தாலறிந்து புறப்பட, அப்பர் தடுக்க, பிள்ளையார் மதுரைக்கேகி அனல் வாதம், புனல் வாதம் புரிந்து, பாண்டியன் கூனை பாடல்களால் நிமிர்த்தி எண்ணுயிரம் சம ணரை கழுவேற்றி சமணத்தை வென்று சைவத்தை வளரச் செய்து ஏனையஸ்தலங்களை தெரிசித்து தொண்டை நாடென்னும் காஞ்சிநகரத் துக்கருகில் அனக்கா திருவத்தூர் சமணரிடம் வாதித்து ஆண்பனையை பெண் பனையாக்கி, வடநகரம் சென்று கோஹரணம் ஸ்தலங்களை தெரிசித்து, திருவொற்றியூரை யடைந்திருக்கும் நாளையில், திருமயிலை சிவநேசசெட்டி என்னும் வணிகர் தன் புதல்வி அங்கம்பூம்பாவையை சம்பந்தருக்கேயென நேமித்திருக்க நந்தவனத்தினில் நங்கையை அரவந்தீண்டி இரக்கக்கண்ட வணிகர் மனக்கிலேசத்துடன் கன்னி கையை தகனஞ் செய்து உருப்புகளை பதனப்படுத்தி கன்னிகாமா டத்திலமர்த்தி சில ஆண்டுகள் கழிக்க, பிள்ளையார் வரவை நோக்கி வொற்றியூர்சென்று அவருக்குரைக்க, பிள்ளையார் திருமயிலையடைந்து பதிகமோதி அங்கம்பூம்பாவை யெனும் மங்கையை கபாலியினரு ளால் எழுந்தருளச்செய்து தன் நகராகிய சீர்காழி வந்தடைந்தார். அன்னையும் பிதாவும் கல்லூர் பெருமணமென்னும் நம்பியாண்டார் செல்வியை விவாஹம் செய்ய குறித்திருந்தமையை அறிந்த சம்பந்தர் வேண்டாமென தடுத்து மதுரையம்பதிக்கு சென்று சோமசுந்திர பெருமானையும், அம்மை மீனுட்சியையும் தெரிசித்து நிற்க. சுவாமி யானவர் சம்பந்தரை நோக்கி சம்பந்தா நீ அடித்து துரத்திய சமணர் கள் ஆங்காங்கு தேசத்துள் பரவியிருப்பதால் கல்லூர் பெருமணம் சென்று நீ திருமணம் முடித்து மனைவியை கைப்பற்றி நானளிக்கும் ஜோதியில் ஐக்யமாகி கைலை சேர்வாய் என வுரைத்தனர்.

அன்பர்களே! இச்சுருக்கங்கள் திருஞானசம்பந்த ஸ்வாமி புரா ணத்தில் இன்னும் விரிவாகயுள்ளதை சிவநேசச் செல்வர்களாகிய நீங் களறிந்தவிஷயமே.

அதர்வணத்தில் கூறப்பட்டுள்ளவை. சம்பந்தா ஈராண்டில்

நீயும் உன் சகோதரர்களாகிய அகோர வீரபத்திரரும், பெரியண்ணன், சின்னண்ணன் யென்னும் உருவந் தாங்கி கஞ்சகிரி யென்னும் நகரத்தை பரிபாலனம் செய்யும் குகுலநாயனுர் பத்தினியாகிய சங்குவதியாள் ஸ்நானம் செய்யும் தாமரை தடாகத்தின் தாமரை இலையின் மீது இரட்டைக் குழந்தையாக அவதாரம் செய்வீர். முன்னரே உன் தாயாரை அக்குளத்தில் அவதாரம் செய்வித்து சங்குவதியாள் எடுத்து வளர்த்து வரும் நாளையில் சமணரின் கினவில் துற்சகுணம் தோன்ற உமையவளை காட்டில் விடுவார்கள் பின்னர் உங்களை சமணர் படைக்கு தலைவர்களாய் நேமித்திருக்கும் நாளையில் அம்மையார் அறிந்து சமண இருள்நீங்கி தெய்வ வடிவங்கொண்டு நீங்கள் மூவருஞ் சென்று முன்னர் அடித்துத் துரத்திய சமணரை அதஞ்செய்து முடிவில் கைலை வந்து சேருவீர்கள் என்று உரைத்தனர்.

சோமசுந்திரக்கடவுள் உமையவளுக்குரைப்பது.

பெண்ணே பார்வதா தேவி, நீ சென்று கஞ்சகிரி யென்னும் நகரத்திற்கேகி சங்குவதியாள் ஸ்நானம் செய்யும் தாமரை தடாகத்தில் முப்பத்திரண்டு லக்ஷணங்களுடைய அழகிய பெண் குழவியாய் அவதரிப்பாய். உன்னை சங்குவதியா ளெடுத்து அரண்மனை செல்ல அரசன் இக்குழவி யாருடையதென்று வினவவும், குளிக்கும் தடாகத்தில் குழவியை எடுத்ததாக கோதையுரைக்க மன்னன் மகிழ்ச்சியாய் வளர்ப்பாயென மொழிவான். நீ அவ்விடத்தில் பதினெரு நாட்கள் தங்கி சமணர் சொர்ப்பனத்தில் துற்சகுணம் காட்ட அச்சமயம் உன்னை காட்டில்விட மலையரையன் மைந்தர்களால் வளர்க. உன் புதல்வர்கள் இருவரும் உன்னை கண்டபோது சமண இருள் நீங்கி தேவவடிவங் கொண்டு சமணர்களை ஜெயித்து கைலாயம் வந்தடைவாயென ஆக்யாபிக்க, அம்மையார் அரனை வலம்வந்து வணங்கி சுவாமி உன்னையும், என்னையும் துதி செய்யா பாவிகளிடம் என்னை அவதரிக்க ஓதுவது உன் திருவுள சம்மதமாவென, அரன் அம்மையை நோக்கி கண்ணே முன்னரே சங்குவதியாளுக்கு வரம் அளித்த படியால் நீங்கள் மூவரும் சென்று அவ்வரத்தை நிறைவேற்றுவது உங்கள் கடமையென கைலங்கிரி கர்த்தனுரைக்க உமையவள் அச்சங்குவதியாள் சரித்திரத்தை தயவு செய்து திருவாய்மலர்ந்தருள வேண்டுமென அரன் கீழ்கண்ட சங்குவதியாள் சுருக்கம் விளம்பினர்.

சங்குவதி சரித்திர சுருக்கம்.

மங்கப்பட்டிணத்தில் மாணிக்க முதலியாரென்னும் ஓர் வேளாள னுண்டு. அவன் சிவனடியாருக்கன்பு பூண்டவன். அன்னவ னுக்கு கமலாங்கினி, அன்னமெனும் இரண்டு பெண் குழவிகள் பிறந்தன, சில ஆண்டுகள் சென்றபின்னர் வேளாளன் பரலோக வாழ்வு அடைந்தனன். கமலாங்கினியென்னும் பெண்பாவாய் தன் அகத்தின் இல்லற தருமங்களை வழுவாது நடாத்தும் நாளையில் ஓர் நாள் ஜலம் திரட்ட செப்பு குடமெடுத்து கங்கைக் கரையை கிட்டி கரையின்மீது குடத்தை வைத்து மேல் திக்கில் மல ஜலம் கழிக்க செல்லுங்கால் அங்கு வெண்ணுக மரத்தடியில் நான் அக்கன்னி கைக்குத் தோன்ற என்னை தோத்தரித்து ஓடோடி சென்று கங் கையில் ஸ்நானம் செய்து குடத்தில் ஜலந்திரட்டி காட்டு புஷ்பங் களைப் பறித்து அச்சிவலிங்கத்துக்கு அன்றுமுதல் அநேக நாட்களாய் அந்நகரிலுள்ளவர் அறியாவண்ணம் இச்சிவ தொண்டை புரியும் நாள டைவில் தனக்கு மங்கைப்பருவம் வாய்க்க வருத்தமுற்று இச்சிவத் தொண்டை யார் இயற்றுவாரென எண்ணி கிலேசமுற்று வருந்தும் நாளையில், தன் உற்றூர்கள் கன்னிகைக்கு மங்களகிரியை நடத்த அம் மையாரை அழைக்க அக்கன்னிகை கோடுகோடென்று அழுக உற்றூர் ஆச்சரியமடைந்து சுபகாரியத்தில் அழுவது யாதெனவென்று வினவ இன்றையதினம் பாவியாகிய நான் சிவத்தொண்டை மறந்தேனென் றுரைக்க அறிந்த வேளாளர் இக்குரியைக் கவனித்து அவ்விடம் சென்று பார்க்குமளவில் கன்னி உரைத்த வண்ணம் சிவலிங்கம் இருக்கக்கண்டு அவ்விடமிருக்கும் கல் முள் செடி முதலியவைகளை களைந்து பந்தலிட்டு அரனுக்கு ஆராதனை செய்து அன்புபூண்டனர். இக்கன்னிகைக்கு ஸ்நானம் செய்வித்து கிரியை நடத்தி சில நாள் கழித்த பின்னர் சிவத்தொண்டை புரிய கன்னிகையின் கருத்துக் கிசைந்தனர். அந்நகரிலுள்ள சமணர்கள் தடாக கரையில் அரனுக்கு செய்த அற்புதங்களை கண்டு கன்னிகையை அவமானம் செய்ய கருத் தில் உறுத்தி கவலையுற்றிருக்கும் நாளில், கமலாங்கினி வழக்கம்போல் சிவத்தொண்டியற்ற விடிய ஐந்து நாழிகைக்கு முன்னமே தடாகக் கரையை வந்தடைய அவ்விடம் கள்ளரைப்போல் காத்திருந்த சம ணப்புலிகள் கமலாங்கினியை தூக்கிக்கொண்டு சென்று நந்தவனத்தில் கற்பையழித்தனர். பின் தொடர்ந்த வேளாளப் பெண்கள் கரை யின்மீது குடத்தைக் கண்டு கமலாங்கினியை காணுது கடைசியாய்

அழுகுரல் அறிந்து அருகில் சென்று அலங்கோலத்தை கண்டு கன்னிகை தாயாரிடம் உரைக்க வேளாளர் ஓடிவந்து விஷயம் தெரிந்து நீ பூசித்த சிவபெருமானே நின்னை கார்ப்பாரென கன்னிகையை விட்டு கலக்கத்துடன் தன் அகத்துக் கேகினுர்கள்.

பிறகு கமலாங்கினி சிவலிங்கத்தினருகில் வீழ்ந்து கோவென்றலர, நான் அவளுக்கு மங்குகண் நித்திரையை வருவித்து அவள் கினவில் தோன்றி மங்கையே நீ கன்னி கழியாத கன்னிகையா யிருப்பதால் உன் ஆசைக்கிணக்க பல்லவனுக்கு பௌத்திரியாய் ஜனித்து கஞ்சகிரி யென்னும் நகரத்தில் ரகுகுலனுக்குகந்த மனைவியாய் சங்குவதி யென்னும் நாமத்துடன் அருபது வருஷகாலம் புத்திர சந்தானமின்றி அநேக அறங்கள் இயற்றி நீ வருத்தமுற்று வாடும் நாள் உமையவளும், என் புதல்வர்களும் புத்திரியாகவும், புதல்வராகவும் தாமரை தடாகத்திலவதரிக்க நீ கண்டெடுத்து உன்னல் வளர்க்கப்பட்டு உன்னை கற்பழித்த சமண கூட்டத்தினரை அவர்கள் அரவே யொழித்து நின் அரண்மனை நோக்கி அங்குள்ள சமணரை அதஞ் செய்யும் வேளையில் அலங்கத்தின் மேலிருந்து நீ அலர நான் எழுந்தருளி கமலாங்கினி என்று தொனிகாட்ட நினக்கு சமண இருள் நீங்கி கயிலாயம் வந்தடைய ஆக்யாபித்தேன் என பரமன் உமையவளுக்குரைத்தனன்.

நிற்க அரனுரைத்தபடி தாமரை தடாகத்தில் தாமரை இலையில் உமாதேவி ஓர் சிரிய குழவியாய் அவதரிக்க அது சமயம் சங்குவதி தன் தாதிகளுடன் ஸ்நானம்புரிய வந்துற்றபோது குழவியின் குரலோசை கேட்டு ஆங்காங்கு ஓடி குழவியை கண்ணுற்று தாவி எடுத்து அரண்மனைச்செல்ல, அரசன் ரகுகுலன் கண்டு குழவி யாருடையதென வினவ தாமரை இலையின் மீதிருந்ததை தாவி எடுத்து வந்ததென்று தையல் உரைக்க, அரசன் மங்கையை நோக்கி இக்குழவியை பாதுகார்த்து வாவென உரைத்தனன். தவிர பதினேரு நாள் கழித்து உமையவள் இருபதினயிரம் சமணர்கள் சொர்ப்பனத்தில் ஏகி துற்சகுணம் காட்டவே அதைக்கண்ட சமணர்கள் பொச்சரிப்பும், பொருமையும், யுத்தமும் நாளுக்கு நாள் தங்களுக்குள் அதிகரிக்க யாவரும் ஒன்றுகூடி அமைச்சனிடம் சென்று முறையிட அமைச்சன் யாவரையும் அழைத்து அரசனிடம் சென்று சமணர்க்குறை பகர அரசன் அறிந்து ஆற்றொணுமன வருத்தத்துடன் ஜாதகனை அழைத்துவா கட்டளையிட ஜாதகன் அரசன் உத்திரவு கேட்டு

மனமுருகி தன் மங்கையிடம் சென்று கண்ணே என் ஆவி இருந்தால் மறுபடியும் நின்னைக் காண்பேன் என்று ஜாதகத்திற்குறிய நூல்களைக்கைப்பற்றி கஞ்சமாகிரியென்னும் நகரடைந்து மன்னனை வணங்கி மன்னனளித்த அனுமதியின்படி உமையவள் மகிமையை ஆராய்ந்து கண்டு அலரி துக்கித்து இருக்க சமணர் மூல்யமாய் அரசன் அறிந்து யாதென்று ஜாதகனை வினவ, சுவாமி இக்குழவியானது இன்னும் ஓராண்டில் உங்களை ஒழித்து, இரண்டாமாண்டில் இருபதினாயிரம் சமணபூண்டுகளும் ஒழித்திடுவாள் என்பதில் சந்தேகம் யாதுளது தவிர இக்குழவி இவ்வெல்லையிலிருந்தால் இல்லாத இடர்கள் நேறுமென்றுரைக்க அரசன் மூர்ச்சையடைந்து சற்று தெளிந்து ஜாதகனை நோக்கி இதற்கு பரிகாரம் யாதுண்டோவென, இதற்குப் பரிகாரம் இக்குழவியை இந்த எல்லைப்புறத்திலுள்ள காட்டில் உடனே விட்டுவிடில் நலமென ஜாதகன் நவில, இல்லரத்திலிருந்த சங்குசதி குழவியை மார்போடணைத்து பலமுறைகள் கூறி தரையில் பிரண்டழுகவும் தாதிகள் புலம்பும் நேரத்தில், அரசன் குழவியை தர்பார் வரவழைத்து குழந்தையின் அழகை உற்று நோக்கி, கண்ணீர் பெருக மந்திரிவசம் ஒப்புவித்து காட்டில்விட உத்தரவளிக்க அமைச்சன் குழவியைக் கைப்பற்றி அங்கரை கடந்து துஷ்ட மிருகங்கள் வசிக்கும் கானகத்தில் கல்லால விருக்ஷத்தினடியில் குழவியை அவ்விடம் வளர்க்க எண்ணமுற்று அருகிலிருந்தசரக்கொன்னை மரத்தைஅணுகி அம்மையாரை மஞ்சம் புல்மீதில் வளர்த்தி நகரை வந்தடைந்தான்.

பின்னர் கஞ்சகிரி சமீபமுள்ள பதிமூன்று இல்லத்தார் மலையரைய மைந்தர்கள் தன் தொழிலுக்காக கோலாஞ்சேரி மார்க்கம் போகுங் காலையில் குழவியின் குரலோசை உற்று தோளின் மேலுள்ள மணிவலையை கீழிட்டு கருக்கில் கல்லால விருக்ஷமடியில் காலால் தடவ மறுகுரல் அறிக்கையிட அறிந்த மலையரையர் சரக்கொன்னை மரத்தடியில் அம்மையைக் கண்டெடுத்து அரண்மனைய யடைய மலையரைய மைந்தர் மனைவிகள் எனக்கு வுனக்கென்று ஒருவருக்கொருவர் அன்றிரவு வாதம் புரிந்து சூரிய உதயாதில் இக்குழவியை எடுத்துவந்த மைந்தைர்கள் ஒன்று சேர்ந்து இக்குழவியானது இன்றுமுதல் இப்பதின்மூன்று இல்லரத்தாருக்கும் பொதுவென்று தீர்மானஞ் செய்து உலகமாதாவேன திருநாமஞ் சூட்டி மலையரையர் அம்மையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்தனர்.

இரண்டாவது ஆண்டில் அகோரவீரபத்திரரும் சம்பந்தரும் பரமன் உத்திரவுபடி கைலேவிட்டு ஆகாயமார்க்கமாக சென்று வேதாரண்யம் காட்டில் இரங்க அக்கானகத்தில் வசிக்கும் மூக்கன் என்னும் அரக்கன் இந்த இரண்டு இளமனிதர் தசையை புசிக்க கிட்டிவர அதையறிந்த இருவரும் திடுக்கிட்டவராய் நிற்க அரக்கன் தன் இடது கையால் ஏந்தி பிடரியின்மேல் ஏற்றி தன் சுரங்கத்திற்கு நடக்க அங்ஙனம் இருவர் சிவபெருமானை தியானிக்க அவரருளினால் சிவகணங்கள் சில ஆயுதம் தருக அவ்வாயுதத்தால் அரக்கனை கொன்று அவன் வேண்டியவாறு தகனம் செய்து ஆரண்யம்விட்டு மதுரைமாநகரம் வந்து அங்கு சில நாள் தங்கி அப்பதியை விட்டு தென் காஞ்சி வீதிச்செல்ல, குற்றாலம் ஆற்றில் ஸ்நானம் செய்து அருகில் தோன்றிய இடும்பன் கடம்பன் வனம்கடந்து சிறுவனுக்கு அவ்வனப் பெருமையையுரைத்தனர். பின்னர் கஞ்சகிரியென்னும் நகரத்திற்கேகி தாமரை தடாகத்தில் இரட்டைக்குழவியாய் அவதாரம் செய்தனர் சங்குவதியாள் தாதியுடன் தடாகம் கிட்ட தனயன்மார் இருவரும் கூக்குரலிட சங்குவதி தடாகத்தை நோக்கி தனயரை தாதியுடன் தாவி எடுத்து தன்னகத்திற்கேக, மன்னன் மங்கையர்மேல் கோபித்து பயமுறுத்த மங்கை உள்ளதைவுரைக்க மகிபன் ஆசையுடன் தனயர் ஜாதகத்தின் பயனை அறிந்து தனயரை வளர்த்து தக்கவாறு கல்வியூட்டி, எட்டாவது ஆண்டில் தன் படைக்கு தலைவராக நியமித்தனன். நிற்க மலையரையன் இல்லத்திலிருந்து வளர்ந்த உமையவள் காளிரூபங்கொண்டு அவ்வரசன் மாட்டுமந்தையை கலக்க மாட்டிடையர் கண்டு அச்சமுற்று அரசனிடம் சென்றுரைக்க அரசன் காவலாளிகளின் மூலயமாய் ஆவினங்களைத் தேடிச்செல்ல அவ்வீதியில் விளையாடிருக்கும் உமையவளைக் கண்டு அரசனிடம் புகல அவ்வரசன் கோபமுற்றவனாய் சூரிய உதயாதிக்குள் மலையரையர்களை தன் நகரம் விட்டோடும்படியாய் அரக்கர் மூலம் அறிக்கையிட மலையரைய மைந்தர்கள் வாடிக்கலக்கமுற்று உதயாதியில் எல்லோரும் புரப்பட உமையவள் வெண்புரவியும் பட்டாவும் பெற்று வீதியில் வருவதை யறிந்த மலையரையர் மகிழ்ந்து அம்மையார் திருவடியை வணங்க உமையவளும் காப்பதாக வாக்குறுதி தந்து யென்பின் பெண்படையாக வருவீர்களென ஆக்யாபித்து அழைத்துக்கொண்டு அவ்வேரிக்கரையை அடைய அந்நகரைவிட்டு அகலாதிருப்பதைச் சமணர்கண்டு படைகளை திரட்டி பாலர் இருவரை படைத்தலைவராக நியமித்து

மலையரைய மைந்தர்களை நோக்குங்கால் உமையவள் மைந்தர் இருவர் மீது விபூதி தூவ சமண இருள் நீங்கி தேவவடிவங்கொண்டு உமையவளிடம் வெண்புரவியும் பட்டாவும் பெற்று போர்க்கோல வீராவேசத்துடன் சமணர் கூட்டத்தில் சிங்கம்போல் குதித்து அடித்து அதஞ்செய்து, பின் கஞ்சகிரியிலுள்ள சமணரை அதஞ்செய்யுங் காலையில் அலங்கத்தின் மேலிருந்த சங்குவதி வருத்தமுற் அரன் கமலாங்கினியெனத் தொனியைக் காட்டிச் சிவபத்தி தந்தருளினர்.

மீண்டும் பாலர் இருவரும் ஸ்தானபானங்களைமுடித்து உமையவளை வணங்க, உமையவள் மலையரைய மைந்தர்களை அழைத்து ஒன்று சேர்ந்து அநேக நகரங்களைக் கடந்து கெடிலா ஆற்றோரம் வந்திறங்க, அதனைக் கண்ணுற்ற சமண தேவிகள் பல்லவராயனுக்குறைக்க அவ்வரசன் படைகளை யனுப்ப பாலர் இருவரும் படைக்குள் புகுந்து அதஞ்செய்து கெடிலா ஆற்றில் குளித்து திருவதிகை வீரட்டான ஈஸ்வரரைத் தரிசித்து பண்ரொட்டி வீதியைக் கடந்து அன்றுபால் அங்குள்ள நந்தவனத்தில் தங்கி நடு ஜாமத்தில் புறப்பட்டுப் பெரும் பயிர் காட்டில் கள்ளரை யொழித்து, ஆனூர்ப் பாலாற்றுக்கரையில் தங்கி அன்று பகல் கழித்து திம்மாவரம் வந்து அவ்விடத்திலிருந்து மீண்டும் வெய்தி புய்தி நிலமுதலியவற்றைக் கடந்து புலியூர்ச் சந்தியப்பன் கோயிலில் அன்று பகல் தங்கி இரவு புறப்பட்டு அநேக கிரிகளை கடந்து, வனம் வனந்திரங்களையும் கடந்து, மண்ணிவாக்கம்ஆரண்யத்தில் கள்வர்களுடன் பெரும்போர் இயற்றி அதஞ்செய்து கோடைநகர் வந்தமர்ந்தார்; அன்று பகல் அங்கு கழித்து இரவு மீண்டும் அநேக நகரங்களை கடந்து ஒற்றியூர் வந்தடைந்து மாவிருக்ஷத்தின் கீழ் இருக்குங் காலையில் அர்ச்சகன் கண்டு நீங்கள் யாரென்று வினவ, அவர்கள் உமையவள் வடகேசலமென்று புகல, அதிக உஷ்ணகாலமாயிருப்பதினால் என் அகத்தில் வந்திளைப்பாருங்களென்று அர்ச்சகன் புகல யாவரும் அர்ச்சகன் கோரியவாறு அரண்மனையில் மூன்று நாள் தங்கி நான்காம் நாள் காலையில் அர்ச்சகனிடம் வடதேசம் செல்ல உத்தேசமென்றுரைக்க, அர்ச்சகன் மனக்கிலேச முற்றவனாய் வடதேசத்தின் பெருமையை விரித்துரைக்க, இவர்கள் அதனைத் தடுத்துப் புறப்பட, வேதியன் நானாழி அரிசி அட்டியிலேற்ற கட்டமுதை கொடுத்தான். அவர்கள் அதனைப் பெற்று அநேக காடு மலைகளெல்லாம் கடந்து மரட்டார், முரட்டாரைக் கடந்து உச்சிவேளையில் வருங்காலையில் அனைவருக்கும் தாகவிடாய் அதிகரிக்க ஆட்டிடையர் மூலமாய் நதிகளைத் தெரிந்து அங்குச்

சென்று ஜலத்தையருந்தி கட்டமுதை அவிழ்த்து தின்ன அறுசுவை இல்லாதிருந்தது. அதனல் பாலர் இருவரும் அறுசுவைக்கு அங்கர வீதிகளை உற்று, நோக்கி சித்தடிகள் மனம் வருந்தி வட திசையை நோக்க அரசமரத்தடியில் ஓர் கிழவியை கண்ணுற்று விரை விற் செல்லுங்கால் அந்நகரையாளும் செல்லியம்மன் தன் ஆலயம் புகுந்து க்தவை யடைத்துக்கொண்டனள். அதையறிந்த இருவர்களும் கிழவியை அணுகி அந்நகரத்தின் விபரம் கேட்க, கிழவி அச்சமுற்று, மௌனமாக இருப்பதைக் கண்டு வாளாயுதத்தை எடுக்க, அக்கிழவி பயந்து கதவை திறந்து வெளியில் வந்து நீங்கள் யாரென்று வினவ அவர்கள் நடந்த விவரம் வுரைக்க நல்லதென, கிழவியும் நடந்த திகிலை வுரைத்து அறுசுவைதர பெற்று நதிக்கரைச்சென்று தம்அன்னையிடம் தந்து நடந்த வர்த்தமானம்நவின்றனர். அம்மையார் அளித்த மூன்று கை சாதம் உண்டு மூவரும் மலையரைய மைந்தரும் செல்லியினுடைய வாயிலை யுடைந்து பஞ்சாக்ஷரத்தை பூமியில் வகுத்து மலையரைய மைந் தரை மறையச் செய்து உலகமாதாவை செல்லியினுடைய பீடத்தி லமரவைத்து வாயலை திறந்து காவல்புரிய. அச்சமயம் செல்லியினு டைய தங்கையாகிய பொன்னி நேரே ஆலயத்துள் பிரவேசிக்க இரு வரும் தம் வாளாயுதத்தால் வீசி மார்க்கை, மார்க்கால் வாங்க அச் சமயம் செல்லி ஆனந்தமடைந்து சிறுவரை வாரி அணைத்து உலக மாதாவை நோக்கி நீங்கள் என் பொருட்டு இவ்வேரிக்கரையில் தங்கி முன் பூசை பெற்று பின் பூசை எனக்காகும் யென்றுரைக்க மூவரும் சம்மதித்து சிலதூரம் சென்று வருகிறோமென வுரைத்து வெள்ளிவாயில் புகுந்து செல்ல, சமணர்கள் இருவரைக்கண்டு அநேக ஆயுதங்களுடன் எதிர்க்க அண்ணர் இருவரும் கடுஞ்சினமுற்று அக் கூட்டத்திற் புகுந்து அதஞ்செய்யுங்காலையில் ஓடினர். ஓடினரை பின்விடாது புரவியுடன் துரத்த ஆங்காங்கு அகப்பட்ட சமணர்களை யொழித்து கருமேக செம்மேகமாய்ப் புழுதிகள் கிளம்ப மீண்டும் துரத்தி ஜம்பு ஓடையருகில் செல்ல, அவ்விடத்தில் ஆழியைக்கண்டு உற்று நோக்கி பாவிகள் இதுவரையில் ஒழிந்தார்க ளென்று உணர்ந்து தன் பட்டாவை அலம்பி தோலிலிட்டு எண்ணூறு வழி யாக காட்டு பொன்னியம்மன் கோவில் வீதி வந்து இடச்சேரி கடந்து விச்சூர் நகர் ஏரிக்கரை வந்தமர்ந்தனர். உமையவள் பாலரால் நடந்தவை கேட்டு அனைவரையும் அழைத்து அநேக நகரங்களை கடந்து பட்டீச்சுரம் பல ஆரண்யங் கடந்து காஞ்சிபுரம் அணுகி மாவிருக்ஷத்தி னடியில் தவமியற்ற அத்தலத்திற்கு சங்கரன்

விந்துவை பூமியில் விழும்படிச்செய்ய அதை உமையவள் தாங்க வலது கையில் எழு வீரரும் இடது கையில் எழு கன்னியரும் தோன்ற எழு கன்னிகளை பூலோகம் செல்ல கட்டளை அளித்து எழுவீரரை மலையரைய மைந்தரிடம் தந்து நாம் தங்கின ஏரிக்கரையின்மீதுஇவ் வேழு வீரரையும் அமர்த்தி முன்பூசை இவர்களுக்குத் தந்து பின்னால் அகண்ட பூசை எங்கள் மூவருக்குந் தருவாயென கட்டளை அளித்ததுமன்றி உங்கள் சந்ததியில் பிறக்கும் பெண் குழவிகளுக்கும் எங்கள் திருநாமஞ் சூட்டக் கடவாய் யென ஆக்யாபித்து, நீங்கள் ஆபத்துக்காலத்தில் எங்களை நினைக்கின் உங்களை நாங்கள் காப்போமென உரைத்து விடைபெற்று கானக மார்க்கமாய் மலையரையன் மைந்தர்க்கு அகண்டபூஜை தந்து அம்மை உரைப்படி எழு வீரரையும் விச்சூர் ஏரிக்கரையின் மீது ஸ்தாபிதப் படுத்தி வருடம் ஓர் பூஜை நடத்தி வாழ்த்து வந்தனர்.

சமணர்மேல் போர்புரிந்த நகரம் விவரம்.

புழுதி கிளம்பினது—புழுதிவாக்கம்.

இடரிவிழுந்தது—இரணவூர்.

கத்தி அலம்பினது—கத்திவாக்கம்.

ஆவி துறந்தது—எண்ணூறு என்னும், இத்தொண்டைநாட்டில் செங்கல்பட்டு ஜில்லா பொன்னேரி தாலுக்கா விச்சூர் கிராமத்திற்கு சமீப்முள்ள நகர்கள் இம்மாதிரி இருப்பதை இன்னுங்காணலாம்.

சுபம். சுபம். சுபம்.

இச்சரித்திரத்தை பின்னால் விரித்துரைக்கும் பாடல்களால் விரிவாகக் காணலாம்; சகோதர சகோதரிகள் வாசாவாய் வாசிக்கலாம்; எனது அன்பர்கள் தாங்களாவது பக்திக்குரிய பூசாலி வகுப்பார்களாவது நான்கு இசையுடன் பாடலாம்.

உ

விநாயகர் துதி.

உச்சியில் மகுடமின்ன ஒளிர்தர நுதலினேடே
வச்சிர மருப்பினேற்றை மணிகொள்கிம் புரிவயங்க
மெச்செவி கவரிதூங்க வேழமாமுகங் கொண்டுற்ற
கச்சியின் விகடசக்கர கணபதிக்கன்பு செய்வாம்.

மோகமெனுங் கடல் கடந்து
முக்திஎனுங் கரைகாண்பாண்—மிகுந்தநாலாம்
பாகமெனும் மலர்கொண்டு
பக்திமெனும் புனலாட்டி பரிந்துசாற்றிச்
சோகமெனப் பாவித்துத்
துரியமெனும் விளக்கேற்றிச் சோகம் நீங்கி
ஆகமெனுங் கோவிலின்கண்
அறிவென்னுங் கணபதிக்கே அன்பு செய்வாம்.

சுப்ரமணியக் கடவுள்.

சோம கிரணப் பெருங்கருணை சுரந்த முகங்க ளோராறும்
சுருதி வழுத்துப் பன்னிரண்டு தோளு நீபத்தொடை மார்புங்,
காமர்நி றச்செம்பட்டாடைக் காட்சி மருங்குஞ் சிறுசதங்கை
களித்தவுபயத் திருத்தாளுங் கடையேன் றுதிக்கப்பணிப்பாயே
சேம நிதியே சுரர்பதியே தெய்வத்தருவே மலர் மருவே
செறிபூரணமே யாரணமே சிறியே னுயிருக்கோருயிரே
பூம ணறியாப் பிரண வத்தின் பொருளைப் பகரும் பூங்கிளியே
போற்று மடியார்க் கோரருளேபோரூர் முருகப் பெருமாளே.

கஞ்சாத னத்தனைச் சிறையிடுவென் முத்தமிழ்க்
கவிஞனைச் சிறைவி டுப்பன்
கடியகுன் றடுவனிருள் கடியுங்குணக் குன்று
கனகும்ப னுக்கருளுவ
னெஞ்சாத கடலழித் தரிவைமுருகா வென்
றிசைக்கவருள் வாரிதருவ
ணிகலவுணர் களைகட் டடைந்த கடவுளரெனு
மிரும்பயிர் தழைப்ப வைப்ப
னஞ்சாய சமணர்கழு வேறவிட் டடியர்நா
டோறுமீ டேறவருவ
னவை தழுவு புத்தன்முடி யிடறியழ லடுமென்பை
நளினமங் கைக்கிணை செய்வ
னஞ்சா திருந்திடேலிவன் வெகுளி கொளுமுன்
மம்புலீ யாட வாவே
யருமறையி னொலிநிலவு சமரபுரி முருகனுட
னம்புலி யாடவாவே.

ஈசன் துதி.

பங்கயன் முகுந்தனும் பரமென் றுண்ணியே
தங்களி லிருவருஞ் சமர்செய் துற்றுழி
யங்கவர் வெருவர வங்கியா யெழு
புங்கவன் மலரடி போற்றி செய்குவாம்.

சோமசுந்திரக் கடவுள் துதி.

சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங்
கொன்றையந்தார் தணந்து வேப்பந்,
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி
மாணிக்கச் சுடர்பூ ணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதி மரு
மகனாகி மீனநோக்கின்
மடவரலை மணந்துலக முழுதாண்ட சுந்தரனை
வணக்கஞ் செய்வாம்.

உமையவள் துதி.

செழியர்பிரான் றிருமகளாய்க் கலைபயின்று
முடிபுனைந்து செங்கோ லோச்சி
முழுதுலகுஞ் சயங்கொண்டு திறைகொண்டு
நந்திகண முனைப்போர் சாய்த்துத்
தொழுகணவர்க் கணிமணமாலிகை சூட்டித்
தன்மகுடஞ் சூட்டிச் செல்வந்
தழைவுறுதன் னரசளித்த பெண்ணரசி
யடிக்கமலந் தலைமேல் வைப்பாம்.

பச்சைமலை பவளமலை தனித்தோற்றம் போலப்
பரிவுடைய திருவடிவு மம்மலை மேலுற்ற
மெச்சுமதித் திருமுகமும் பொய்ச்சதிரு விடையும்.
விழிமூன்றும் கரநான்கும் பெரிய நாயகியார்
கச்சிருந்த முலைத்தடமு மமுத வாக்குங்
கருங்குழலும் வெண்ணகையுஞ் செய்ய வாயு
நச்சுமடி யவர்பிறவி யறுக்குந்தாளு
நைந்துருகி புந்தியினிற் சிந்தை செய்வாம்.

தூளேறு தூசுபோல் வினையேறு மெய்யெனுந்
தொக்கினுட் சிக்கிநாளுஞ்
சுழலேறு காற்றினிடை யழலேறு பஞ்செனச்
சூறையிட் டறிவையெல்லாம்
நாளேற நாளேற வார்த்திக மெனுங் கூற்றி
னட்பேற வுள்ளுடைந்து
நயனங்க ளற்றதோ ரூரேறுபோலவே
நானிலந் தனிலலையவோ
வேளேறு தந்தியைக் கனதந்தி யுடன்வென்று
விரையேறு மாலை சூடி
விண்ணேறு மேகங்கள் வெற்பேறி மறைவுற
வெருட்டிய கருங்கூந்தலாய்
வாளேறு கண்ணியே விடையேறு மெம்பிரான்
மனதுக் கிசைந்தமயிலே
வரைராஜனுக் கிருகண் மணியா யுதித்தமலை
வளர்கா தலிப் பெண்ணுமையே.

மலையான் றவஞ்செய்து பெற்றமுத் தேயேற்றி வாழ்கனக
சிலையான் மணக்க மணக்குந் தெய்வீகத் திருமலரே
யலையான் மலிகடற் பள்ளிக்கொண்டான் றெழு மாரமுதே
வலையா னருமை மகளே வடிவுடை மாணிக்கமே.

விஷ்ணு துதி.

ஆரணப் பொருளே போற்றி அகிலநா யகனே போற்றி
பாரளந் தவனே போற்றி பாண்டவர்தூதா போற்றி
வாரண மழைத்த போது வந்துகாத் தவனே போற்றி
காரண வஸ்துவான கண்ணனே போற்றி போற்றி.

நாரண போற்றி போற்றி—நரசிம்ம ரூபா போற்றி
காரண குருவாய் வந்தென் கவலையைத் தீர்ப்பாய் போற்றி
வாரணந் தன்னை காத்த மாதவா போற்றி போற்றி
ஸ்ரீரணம் திரங்கிவாழும் ஸ்ரீரங்க நாதா போற்றி.

கலைவாணி துதி.

தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய் செறிந்த பல்லுயிர்
நாவுதோ றிருந்திடும் நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசை புனைந்து போற்றுவாம்.

மாணிக்கசுவாமிகள் துதி.

அணிமுடி யாதி யமரர் கோமா னனந்தக் கூத்த னறுசமயம்
பணிவகை செய்து படவ தேறிப் பாரோடு விண்ணும் பரவியேத்தப்
பிணிகெட நல்கும் பெருந்துரையே யெம்பேரருளாளன்
பெண் பாலுகந்து
மணிவலைகொண்டுவான் மீன்விசிறும் வகையறிவாரெம் பிரானுவாரே.

அண்ணாமலையார் துதி,

ஓதுமலை துள்ளிய வீபூதிமலை கைலைமலை
யுரைத்தமலை உன்றன் மலையே
உற்றமெஞ் ஞானியர் தபோதனர்கள் சூழுமலை
ஓங்குமலை யழியாமலே
சோதியே யிருகண் களிக்குமலையே யடியார்
தொழுதுருகும் சோனமலையே

துங்கபத்தி யமுன கலைவாணி தீர்த்தமலை
சுனை அருகில் ஞானிமாமலை
வேதமலை சித்திர வினோதமலை யென் அன்னை
வேண்டுமலை காண்டாமலை
வினைதீர்க்க வந்தமலை கனகமிசேகமலை
வீறுமலை ஏருமலையே
ஆதிமலை மிதுரை யனழிமா நின்றமலை
அரகாமகேசன் பரமகுருயீசனே
அனிஅண்ணு மலைவாசனே.

அங்காளம்மன் துதி.

அக்குமணி நீறணிந்து வுன்கோவில் பணிவிடையாய்
அடியார்கள் அநேகங் கோடி
அருள்கொண்டு மருள்கொண்டு சன்னதியி லாவேசம்
ஆடுவார் அனேகங் கோடி
சுக்கிரவாரந்தோறும் பொங்கலும் பூசையும்
செய்வார்கள் அநேகங் கோடி
சுற்றியே பக்தியாய்த் தினந்தோறும் ஆலயந்
தொழுவார்க ளநேகங் கோடி
மிக்கவே மேலணுகு வினை தீர்த்தருளு வாயென்று
வேண்டுவார் அனேகங் கோடி
தக்கன் மகளாயிவள் தேவியாள் மலையனூர்
அங்குமங்காள ரூபி
தாண்டவனிடத்தில் வளர் ஆண்டவ னிடத்தில்வளர்
தாண்டவ ஈசுவரியே.

ஆங்கார வுக்ரமுடன் ஆடிவரு பூதமும் அலகைவிடுந் துஷ்டமுனியும்
அம்மணி உந்தனிட சந்நதியில் வந்தவுடன் ஆடியது ஓடிவிடுமோ
ஓங்காரமாகவரும் ருத்திர காட்டேரியும் ஓடிவரும் சாமுண்டியும்
பாங்கிலா ஆயிரம் சிரமுடைய கணமும் பலமான லாடமுனியுந்
பகலரியவண்ட பரப்பை குட்டிச்சாத்தான்பதியில்வாழ் முன்கூலியும்
ஆங்காக்கு ஓடிப்பதுங்குமோ அல்லது ஆலயம்வந்தணுகுமோ
அத்தனூர் தன்னுடைய மலையனூர்பதிவாழும் அங்காளவல்லி
வுமையே.

குரு வணக்கம்.

ஆரணிப்பதிவாழும் அருள் வெங்குங் கோவிந்து நாட்டார்
சீரணி சுதனாய் வந்த திகழ் முனிசாமி வல்லவ்
நாரணி அங்காளம்மன் தற்காலம் பூண்பணிகன்
தாரணி முனிவருக்கு சாற்றினேன் திருமுடியை

சீர் பெருகுஞ் சென்னை சிந்தாதிரிப்பேட்டை
செப்பரிய பருவத கோத்திரத்தான்
பேர்பெரிய தவங்கள் பல செய்து வந்த
பேசரிய முனுசாமி நாட்டாரும்
பார்தனிலே பலவிதமாய் தர்மம் செய்து
பக்தர்களை மெய்ஞ்ஞான்றும் வணங்கி யேத்தி
மாரனை திருவுள்ளம் மகிழ்ந்து சின்னப்பன்
மாநிலத்தில் அவரடியை மகிழ்ந்துபோற்ற.

விச்சூர்.

உலகமாதா பேரியண்ணன் சின்னண்ணன் விருத்தம்.

முந்தியோர் பிறவி தன்னில் சம்பந்தராய் வந்து
மூர்க்கரை யடக்கி வைத்தாய்
மூண்டிடும் சமணரை வாதித்து வைகையில்
மூழ்கவே கழுவேற்றி வைத்தாய்
பின்னிட்ட சமணர்கள் ஆங்காங்கு சென்றுமே
பிதற்றினர் வுலகமுழுதும்
பித்தனர் அருள்பெற்று அவனியில் வந்து
பிடிவாதம் செய்தமன்னு
மட்டிட்ட மயிலை நகர் வந்துநீ வணிகப்பெண்
மங்கையை எழுப்பி வைத்தாய்
மாதாபிதாவுன்னை எதிர் நோக்கிருக்கையில்
மாளிகை வந்தடைந்தாய்
பெண்குறித்திருக்கவே விவாகமது
செய்வதற்கு பிதாவுரை கேட்டுமென்னு
பெண் மதுரை யரசாளும் நன் மதுரை சென்றுமே
பெருமானை தரிசித்ததேவா.

சின்னம் அலித்திட்டே மீனாட்சி சொக்கரும்
இச்சிறுவனை தானழைத்து

சிதறிய சமணர்கள் பரவியே இருப்பதால்
சீர்காழிப் பதியைச் சென்று
கன்னிகை விவாகங்கள் செய்துமே மைந்தனே
கல்லூறு பெருமணத்தில்
காண்கின்ற ஜோதியில் கலந்துமே தேவராய்
கைலேயை சென்ற பின்பே
அன்னேப்பிதா வுன்னே கண்டுமே இருவரும்
ஆரோகணம் செய்குவார்
அகோர வீரருடன் சென்றுமே ஈராண்டில்
அண்ணராய் யவதரித்து
எண்ணமதை முடிக்கவே சமணர்குல வேந்தனுய்
யேகியே கஞ்சகிரியில்
எதிர்த்துமே சமணரை அதஞ்செய்த வீரரே
எங்களண்ணன் சின்னண்ணன் துரைவா.
பொன்னுலகு ரத்னமுடி மிக்கவழகு பெருகு
புஜகீர்த்தியி னெளியினழகும்
பொருவிலா பணிகளெட்டு மறுவளரும் மார்பினில்
பொருந்து முன்னூலினழகும்
முன்னுதன் முச்சந்தி கஞ்சமலர் தாளழகும்
மாநிலந் தன்னில் வருவாய்
மகிழ்கொண்டு எளிமையுடன் சொல் எளிதோ
கருணை மாருத தெய்வ மயமோ
நன்னய மிகுந்துவரும் பரிபூரணுதனே
காத்தருள்வாய்
நான்மறைக ளறியாத ஜோதியே நீதியே
நற்றவர்க்குதவுபரனே
மின்னுதன் பொர்க்கோவில் கோபுரம்
மேவிவளர் விச்சூரில் வாழ்
வீர நாராயணு அபய நாராயணு விமல மெஞ்ஞானச் சுடரே.

விநயகருக்கு யானைமுகம் வந்த சுருக்கம்.

ஐங்கரரே முக்கணரே யானை முக ஐங்கரரே
ஆனையென்ன ஆனையய்யா அயனிட வாசலிலே
எழுதிருக்கும் சித்திரத்தின் எழுந்திருந்த ஆனை அய்யா
கட்டிருக்கும் மண்டபத்தில் கண்டெடுத்த ஆனை அய்யா

பார்த்ததொரு சித்திரத்தில் பரிந்தெடுத்த ஆனே அய்யா
சித்திரத்தை காட்டியல்லோ சிவபெருமான் தேவியரும்
பரமரை நோக்கியங்கே பார்வதியாள் எதுரைத்தாள்
கண்டதொரு சித்திரத்தில் ஒரு காளையை எழுப்புமைய்யா
நான் பார்த்ததொரு சித்திரத்தில் பாலகனை எழுப்புமைய்யா
அசுரர் முதல் அரக்கரையும் அடியோ டொழித்திடுவான்
உமையவள் மொழியை அங்கே ருத்திரரும் தானறிந்து
சித்திரத்தை நோக்கினராம் சிவபெருமானப்பொழுது
அது ஆனே உருவமாகி அசைந்து நிற்கையிலே
ஆனே இரண்டுக்குமே அளித்தார் வுயிரை அங்கே
துள்ளி எழுந்ததங்கே துடர்ந்ததுபார் நந்தவனம்
கட்டியணைந்ததுபார் காமவிடாயாகி யிரண்டும்
ஐங்கரரை தானழைத்து அவதாரம் செய்யவைத்தார்
மூன்றே முக்கால் நாழிகைக்குள்ளே மூஷிகருந் தான் பிறந்தார்
ஆனே முகத்துடனே அசைந்தாடும் தும்பியுடன்
ஆனே வயிறுற்றுடனே பழமேந்துங் கையுடனே
ஒருமுழந் தும்பியுடன் ஒத்தநல்ல கொம்புடனே
உத்தமியாள் தானறிந்து உதித்ததொரு தன் குழந்தை
ஓடியெடுத்து அம்மன் உச்சியொடு தான் முகந்து
ஐய்யனவன் அமர்ந்திருக்கும் அழகுபெரு சிம்மாதனம்
சிம்மாதனத்தின்மீதே சிவபெருமான் தேவியாரும்
அமர்ந்தா ரிருவரும்தான் அயனுடைய அரண்மனையில்
கிரியை நடந்ததுபார் கிருபையுள்ள தேவரெல்லாம்
அண்ணலுக்கு அவிர்பாகம் அயனவன் தானளிக்க
அவிர்பாகம் பெற்றல்லவோ ஆதிசிவன் சத்தியாரும்
சத்தியலோகம்விட்டு தானெழுந்தார் ஈஸ்வரனும்
அங்குயிருந்த தேவரெல்லாம் சூழ்ந்து நெடுந்தூரம் வந்தார்
வந்தநொரு தேவருக்கு மனங்குளிர தானுரைத்து
வெள்ளைவிடை யேரியல்லோ வேழமுகம் மூவருந்தான்
ஆதிகையிலங்கிரிக்கே ஆண்டவரும் வந்தமர்ந்தார்
அன்புடனே ஐங்கரனே அன்புடன் தான் வணங்க
சரணம் சரணமையா சண்முகர்க்கு மூத்தவரே
கோடி சரணமையா குஞ்சரத்தா தஞ்சமையா.

ஆறுமுகஸ்வாமி அவதார சுருக்கம்.

ஆரூராம் போரூராம் அமர்ந்த திருத்தணியாம்
ஆறுமுகத்திலேதான் அவதரித்த பாண்டியனும்
ஈசர் முகத்திலே எழுந்திருந்த பாண்டியனே
ஆறுபொர்ரி தானெடுத்தார் அக்னி வர்ணனுமே
தாங்கமுடியாமல் தவித்து இருவருந்தான்
காடுமலை கடந்தார் கடுக நடந்துவந்து
சரவண பொய்கையிலே சாய்த்தார்கள் ஆறுபொரி
ஆறு பொரிகளங்கே ஆறு குழந்தையாகி
சரவண பொய்கையிலே சாமிதுரை தான் உதித்தார்
ஆறு குழந்தைதன்னை அறிந்தாராம் ஈஸ்வரனுர்
ஆறுபேர் தாதியரை ஆண்டவருந் தானழைத்து
பால்கொடுத்து நீர் வளர்ப்பீர் பாவையரே தாதியென்றார்
உத்திரவு பெற்ற தாதியர்கள் ஓடினரே சரவணையில்
ஆறுபேர் தாதியரும் ஆறு குழந்தைகளை
பால்கொடுத்து வளர்க்கையிலே பகவானவர் தானறிந்தார்
பெண்ணே பெண்ணே நாயகமே பெருமாட்டிக் கண்மணியே
நம்முடைய பிள்ளையைதான் நாமறிவோ மென்றுசொல்லி
வெள்ளைவிடை ஏறியல்லோ விமலரும் உமையவளும்
சரவண பொய்கைதன்னில் சாமிநாதர் வந்திறங்கி
உன்னுடைய பாலகனை உத்தமியே நீயெடுப்பாய்
ஈசருரைகேட்டு அம்மன் இருகரத்தால் தாவினளாம்
ஆறு குழந்தைகளை அணைத்து எடுக்கையிலே
ஆறுமுகம் பனிரெண்டு கை ஒருடலுமாகி நின்றார்
ஆறுமுகஸ்வாமியென்று அமைத்தாராம் ஈஸ்வரனும்
சத்தியரும் தானெடுத்து சண்முக தேவரைதான்
ஆறுமுகத்துக்குமே அழகான முத்தமிட்டாள்
பன்னிரண்டு கண்களுக்கே பாவையரும் முத்தமிட்டாள்
உடம்பெல்லாம் முத்தமிட்டாள் உள்ளமெல்லாம் தான் முகந்தாள்
ஈசன் முருகனைதான் இருகையால் தானெடுத்து
வாறி அணைத்தாரும் வடிவத்தை நோக்கினராம்
குருத்தோங்கி தானிருக்கும் குஞ்சிரிப்பு தன் முகத்தை
பரித்திருக்கு பன்னிரெண்டு பவழவாய் தங்கரத்தை
பரமர் ஆசையாலே பாசமது கூடியங்கே

இட்டாராம் முத்தமங்கே ஈராறு கைகளுக்கும்
பன்னிரண்டு கண்களுக்கும் பாரமுத்தம் தானுமிட்டார்
வெள்ளை விடையேறி விமலர் பயணமானார்
பால் அளித்த தாதியரும் பரமனடி தான் வணங்க
மாதம் ஒருநாள் பெண்ணே மைந்தனுடை நோன்புகளை
கிருத்திகை விரதங்களை கிருபையுடன் நூற்பீராகில்
புத்திரதானம் பெண்ணே புதல்வர்களை தான் பெருவாய்
மங்கிலியம் தான் பெண்ணே மலைபோல தான் வளரும்
நடவுங்காண் பெண்ணேயென்று நாயகரும் தானுரைத்தார்
ஆறுமுகஸ்வாமியைத்தான் ஆண்டவரும் தானெடுத்து
ஆதி கைலாயம் ஆண்டவரும் வந்தடைந்தார்
அனைவருக்குந் தஞ்சமையா அடிபணிந்தேன் மூவருக்கும்
சரணம் சரணமையா சாற்றினேன் திருமுடியை.

கலைவாணி சுருக்கம்.

வாணிகலை வாணியம்மா மலையவன தேவியம்மா
பூவிலவதரித்த பூமகளே வாணியம்மா
மலரில் அவதரித்த மலைமகளே வாணியம்மா
கல்விக்குடையவளே கட்டழகி வாணியம்மா
அரம்பாடும் நாவிலம்மா அமருங்கலை வாணிவர
சுரம்பாடும் நாவிலம்மா சுந்தரி குடியிருப்பாய்
கவிராயர் தன்மனதில் காற்று குடியிருப்பாய்
வேந்தருட உள்ளமதில் விளங்கும் வீரவாணிவர
பிர்மாவிட நாவிலம்மா பணியும் கலைவாணி வர
ஏமனிட நாவிலம்மா எழுதுங்கலை வாணிவர
பரமரிட நாவிலம்மா பணியுங்கலை வாணிவர
பிர்மாவுக்கு அன்னரதம் உந்தனுக்கு புஷ்பரதம்
புஷ்ப. ரதமேரி பொருந்துமம்மா நாவிலே நீ
பொன்னு எழுத்தாணி பொட்டி குருத்தோலை
தங்க எழுத்தாணி தாளிப் பனை ஓலை
ஓலையில் எழுதுவதை என் நாவில் எழுதுமம்மா
நாவில் எழுதுமம்மா நல்ல கலைவாணியம்மா
நல்லகலை வாணியம்மா நான்முகனார் தேவியம்மா
மதுரைப்பதிவாழும் வாணி சரஸ்வதியே
வாணி சரஸ்வதியே வாக்கில் குடியிருப்பாய்
சரணம் சரணமையா சாற்றினேன் திருமுடியை.

சரித்திர வரலாறு

மதுரை சிறப்பு.

மாணுமதுரை யொன்றும் வடமதுரை பட்டிணமாம்
தேனு மதுரையொன்றும் தென்மதுரை பட்டிணமாம்
நாலு மதுரை யொன்றும் நால்மாடக் கூடமாமே
பத்து மதுரை யொன்றும் பாண்டிவள நன்நாட்டின்
தென்காஞ்சி முத்திறங்கும் தென்மதுரை பட்டிணத்தின்
வடகாஞ்சி முத்திரங்கும் வடமதுரை பட்டிணத்தில்
மாரிபெய்து நெல்விளையும் மங்கையிட திருநாட்டில்
பனிசொரிந்து நெல்விளையும் பாண்டியன் நன்னுடாம்
மாடுகட்டி போரடித்தால் மாளாத தென்மதுரை
ஒட்டை கட்டி போரடித்தால் ஒழியாத தென்மதுரை
ஆனைகட்டி போரடித்தால் அணிமதுரை பட்டிணத்தில்
தென்னம்பிள்ளை சோலைகளாம் தேவரிட வீதிகளாம்
வாழைகமுகு சோலைகளாம் மன்னரிட வீதிகளாம்
தண்ணீர் தடாகமுண்டு தாமரை பொய்கையுண்டு
நச்சுநல்ல பொய்கைகளுண்டு நாலுவித சாலையுண்டு
மல்லி வனங்களுண்டு மாதளம்பு தோப்புவுண்டு
வெய்தி நிலங்களுண்டு வேளாளர் மெத்தவுண்டு
புழுதி நிலங்களுண்டு பூந்தோட்டம் மெத்தவுண்டு
ஆனை விலைமதிக்கும் அரசரிட வீதியுண்டு
ஒட்டை விலைமதிக்கும் குஜ்ஜிலர்கள் வீதியுண்டு
சொக்கர் எழுந்திருக்கும் சொகுசான வீதிகளும்
ஆண்டவர் எழுந்தருளும் அறுபத்து நான்கு வீதி
அம்மன் எழுந்தருளும் அறுபத்து நான்குவீதி
மீனாட்சி எழுந்தருளும் மீனனுட வீதியுண்டு
பொத்தாமரை தீர்த்தமுண்டு புகழரியா மண்டபமாம்
ஆயிரக்கால் மண்டபமாம் ஆண்டவர் சந்நதியாம்
பத்தடுக்கு கோபுரமாம் பரமனிட ஆலயமாம்
நான்கு மதில்களுண்டு நவரத்ன மேடையுண்டு
தங்கத்தால் தானிழைத்த தாவடங்கள் மெத்தவுண்டு
வயிரத்தால் தானிழைத்த மதாணிகள் மெத்தவுண்டு
மரகதத்தால் தானிழைத்த மாமணி சிம்மாதனம்
பெண்ணரசு பூண்டதொரு பெண்மதுரை பட்டிணமாம்
காவேரி சேர்ந்ததொரு கனமதுரை பட்டிணமாம்

கூன்பாண்டியன் சமண மதமானது.

பட்டத்தரசு அவர் பரிவுள்ள பாண்டியனவன்
கூன்பாண்டியன் நாளையில் குதித்ததாம் சமணர்மதம்
பாண்டியனை தன்வசமே பண்ணினர் சமணருமே
மந்திரியை தானழைத்து மர்மத்தை சொல்லலுற்றார்
அமைச்சனிடம் நோக்கியல்லோ அடாத மொழியுரைத்தான்
ஈசனுட ஆலயத்தை இழுத்துதாள் போடுமென்றார்
பரமனிட ஆலயத்தை பதிவிலங்கு போடுமடா
மீனாட்சி ஆலயத்தை முன்பூட்டு போடுவென்றார்
ஈசனை துதிப்பவரை ஏற்றுவேன் கழுவிலென்றார்
பரமனை துதிப்பவரை பாரகழு வேற்று யென்றார்
தண்டோரா தட்டுமடா தனிமதுரை என்னகரில்
வெள்ளி தமுக்கைக்கொண்டு வீசிடுவாய் பட்டணத்தை
தங்க தமுக்கெடுத்து சாற்றிடுவாய் தரணியெங்கும்
கட்டுதிட்டம் செய்யும் மந்திரி கனமதுரை பட்டிணத்தில்
அவணி முழுதும் மந்திரி அரியவுரை மன்னருக்கு
கண்டார் மதுரைவாசி கதறிப் புலம்பலுற்றார்
மன்னனிட ஆக்கினையை மனதில் நினைந்தழுதார்
ஈசரை தான் நினைத்து இட்டார் பெருங்கூச்சல்
பரமனை தான்நினைத்து பதரி புலம்பலுற்றார்
அம்மையை தான்நினைத்து அழுது புலம்பலுற்றார்
மன்னனிட தேவியர்க்கு மந்திரி தானுரைத்தார்
மங்கையர்க்கரசியருக்கு மனது கொதித்துதங்கே
அமைச்சனை நோக்கியல்லோ அரிவையரும் சொல்லலுற்றாள்
மந்திரி குலசேகரு மன்னர் பூசை நாம்புரிவோம்
அரசனரியா வண்ணம் அரனை துதித்திடுவோம்
என்று உரைத்து மங்கை ஏக்கமுற்று தானிருந்தாள்
பரவிற்று சமணமதம் பாண்டியன் மதுரையிலே
சமண மதந்தனிலே சார்ந்தார் மதுரைவாசி
சொக்கரையும் மீனாட்சியை தொழுபர் ஒருவருமிலை
இருக்குமந்த ஆலயத்தை இழுத்துதாள் பூட்டினராம்
சங்கரனுந் தானறிந்தார் சமணருடைய கூற்றையெல்லாம்
நால்வரை உண்டுபண்ணி நடுநாயகத்தை ஏது செய்தார்
ஆறுமுக சாமியினின் அம்சத்தை உண்டுசெய்து

சீர்காழி பதியிலே சிவபாதவிரதரிடம்
பகவதியாள் தன்வயிற்றில் பாலகனை உண்டு செய்தார்
ஆளுடையப் பிள்ளையென்று அவதரித்தார் அந்நகரில்
மூன்று வயதிலே திருமுலைப்பால் உண்டுபிள்ளை
பார்வதியாள் ஞானப்பாலை பாலகனும் உண்டு அங்கே
அற்புத விளையாட்டுகளை ஆனந்தம் தான்புரிந்து
ஏனைய நாடுசென்று ஈஸ்வரனை தான்துதித்து
பதினாயிரம் கூட்டத்துடன் பாருலகம் தானுழன்று
திருமறைக் காட்டிலல்லோ தேவாரமந்திருந்து
மங்கையர்க்கரசியின் மனவருத்தம் தானறிந்து
மதுரைப்பதியை நோக்கி மந்திரியா லமைக்கப்பட்ட
மண்டபத்திலிருக்கையிலே மன்னனுரை கேட்ட சமணர் எல்லாம்
அக்கினியால் மண்டபத்தை அழிக்கவே தானினைத்தார்
மந்திரத்தால் மண்டபத்தை மாபாவிகள் தானெரிக்க
தீங்கையுந் தானறிந்து சிறுவருக்கு கோபம் மூண்டு
அக்கினியை தானழைத்து அரசனுக்கு தகியுமென்றார்
பையவேசென்று அங்கே பாண்டியன் தகியுமென
கட்டளை இட்டாராம் காழி நகரானும்
சுருக்காக சென்றுமங்கே ஜுரநோயை உண்டுபண்ண
தாங்கமுடியாமல் தவிக்கிறான் பாண்டியனும்
பொருக்கமுடியாததை பொற்கொடியாள் தானறிந்து
மன்னனை தான்வணங்கி மங்கையரும் கூறலுற்றார்
ஆரோ சிறுகுழந்தை அணிமதுரை வந்திருக்க
அவராலே தீருமென்று அநேகர் உரைக்கின்றாரே
அழைத்துவா யென்றுதான் அரசனும் அறிக்கையிட
ஆளுடையப் பிள்ளையாரை ஆரணங்கு தானழைக்க
சிவிகையின் மீதேறி சிறுவரும் வந்தமர்ந்தார்
சிறுவரைக் கண்டல்லோ சீறினார் சமணரெல்லாம்
வாதம்புரிய எண்ணி மைந்தனை உற்றுநோக்கி
வடதுபக்கம் தீர்ப்போமென வாதிகள் தானுரைத்து
இடதுபக்கம் தீருமென்று இரைஞ்சார் சமணரெல்லாம்
ஆளுடைய பிள்ளையாரும் அறிக்கைக்குக் கட்டுப்பட்டார்
சமணரிட மந்திரத்தால் அரசன் பாதைதீரவில்லை
மன்னவர்க் கதிகமாக சவுக்கியமில்லை என்று

மாபாவி சமணர்வாட மனது துடிதுடித்து
சிம்மாசனத்திலிருக்கும் சிறுவரை நோக்கினராம்
திருநீற்று மந்திரத்தை ஜெபிக்க சிறுவரங்கே
சூலை ஒழிந்ததுபார் ஜுரநோயும் தீர்ந்ததுபார்
கூனும் நிமிந்ததுபார் குழந்தையின் மந்திரத்தால்
அனல்வாதம் புனல்வாதம் அங்குசெய்ய சமணரெல்லாம்
வாதத்தை தான் ஜெயித்து வல்லவரும் வீற்றிருந்தார்
தோற்ற சமணர்களும் தொங்கினர் கழுவினிலே
எண்ணாயிரம் சமணர்களும் ஏற்றி கழுவு அங்கே
வைகைக் கரைதனிலே மாண்டார் சமணரெல்லாம்
வாதத்தை ஒழித்துமங்கே வடதேசம் தான்திரும்பி
காஞ்சி நகர்தனிலே காளையரும் வந்தமர்ந்து
அனக்கா திருவத்தூரை அடைந்தார் சிறுவருமே
அமணரிடம் வாதம்செய்து ஆண்பனையை பெண்பனையாய்
அவரா லனுப்பப்பட்ட அரவத்தை தான்பிடித்து
விட்டாராம் ஜோலியிலே வெட்கித்தார் சமணரெல்லாம்
வேணதோர் நாடெல்லாம் வெய்யலிலும் கானலிலும்
கோகரன நாட்டையல்லோ குழந்தையவர் தான்நோக்கி
பணியால் வருந்திய பக்தர்களைத் தான்காத்து
ஒற்றியூர் தன்னகரம் உத்தமரும் வந்தடைந்தார்
மயிலைப் பதியிலே வணிகப்பெண்ணை தானெழுப்ப
அரவத்தால் மாண்டதொரு ஆரணங்கை தான்எழுப்ப
சீர்காழி பதிதன்னில் சிறுவரும் தானடைந்து
தன்நாட்டை வந்தடைந்து தந்தையரை நோக்கினாராம்
மாலையும் சந்தணமும் மகிழ்ச்சியுடன் தான்சாத்த
விவாகம் புரிவதற்கு விருப்பமுற்று தானிருக்க
தந்தையுரைத்தமொழி தானறிந்த சம்பந்தரும்
வேண்டாமென தடுத்து வெகுண்டு நகரைவிட்டு
மனவருத்தங் கொண்டுமைந்தர் மதுரைநகர் தானடைந்தார்
சமணம் ஒழிந்து அங்கே சைவம் இருக்கக்கண்டு
அம்மையையும் சொக்கரையும் அடிபணிந்து நிற்கையிலே
மைந்தனை தானழைத்து மாதேவர் சொல்லலுற்றார்
கன்னிகை விவாகம்செய்து கல்லூர் பெருமணத்தில்
கான்கின்ற ஜோதியிலே கலந்துமே தேவராகி

சமணரை ஒழிப்பதற்கு அகோர வீரருடன்
ஈராண்டில் இருவருமாய் ஏகியே தென்திசையில்
கஞ்சகிரி பட்டிணத்தில் கன்னியர்கள் ஸ்நானம் செய்ய
சங்குவதி ஸ்நானம் செய்யும் தாமரை தடாகத்திலே
இரட்டைக் குழந்தையாக இருந்து அவதரிப்பீர்

வசனம்.

முன்னமே உன் தாயாகிய மீனாட்சியை அக்குளத்தில் அவதாரஞ்செய்து சங்குவதியாளெடுத்து வளர்க்கையில் துர்ச்சகுணத்தின் பயனாக காட்டில்விட மலையரைய மைந்தர்கள் எடுத்து வளர்க்கவும் நீங்கள் ஈராண்டில் அக்குளத்தில் அவதாரஞ்செய்ய உங்கள் இருவரையும் எடுத்து வளர்த்து வருநாளையில் உமையவளைக் காண்டில் சமண இருள் நீங்கி தேவவடிவங்கொண்டு மூவருஞ் சேர்ந்து சமணம் சாக்கிய முதலியதை ஒழித்து முடிவில் கைலாயம் மூவரும் வருவீர்களென்று பரமன் உரைத்தனர்.

உமையவளை கஞ்சகிரிக்கு ஏக பரமன் விடை தந்தது.

பெண்ணே பெண்ணே நாயகமே பெருமாட்டி கண்மணியே
கண்மணியே நாயகமே கற்பகத்தின் மெய்ப்பொருளே
கஞ்சகிரி தன் நகரம் கன்னியரே தானடப்பாய்
வரம்பெற்ற சங்குவதி வைகையிலே ஸ்நானம் செய்ய
கன்னிக் குழந்தையாகி கங்கையிலே நீ மிதக்க
உன்னை எடுத்துமல்லோ உத்தமியும் தான் வளர்க்க
பதினோராம் நாளையிலே பாவிகளை நீ மிரட்டு
உன்னை காட்டில் விடுவார்கள் காதயருந் தான் வளர்ந்து
கண்டு பயந்து தேவி கடவுளடி தான் வணங்கி
ஏதுகுறை செய்தேனென்று இக்குறைக்கா ளாக்கினீரே
அடிபணிந்த அம்மையாரை அரனார் தேற்றியல்லோ
சங்குவதி நாயகிக்கு நான் சாற்றின வரம்படிக்கு
நீ சென்று அவதரித்து சிக்கிடுவாய் தன்கையாலே
சங்குவதி சரிதையை சாமியுரைத்திடுவார்

சங்குவதி சரித்திரம் உமையவளுக்குரைப்பது.

மங்கநல்ல பட்டிணத்தில் மாணிக்க முதலியாராம்
மனைவியுடன் வாழ்ந்திருந்து மங்கையரை யீன்றெடுக்க

மூத்தவள் கமலாங்கினியே இளையவள் அன்னமென்பார்
இருக்குமந்த நாளையிலே இறந்தான் வேளாளனுமே
கமலாங்கினி நாயகியும் காலையில் எழுந்திருந்து
இல்லமது சுத்திசெய்து ஈசன்பூஜை தான் முடிப்பாள்
அரன்பூஜை சிவன்பூஜை அரிவையரும் தான் முடிப்பாள்
அன்னம் அளித்திடுவாள் அரனிட தொண்டருக்கு
ஆபத்தை தீர்த்திடுவாள் ஆதரிப்பாள் மங்கையரும்
கேட்டவர்க்கு தானமது கிருபையுடன் தானளிப்பாள்
அன்னைமொழி தள்ளாத அரிவையரும் தானடப்பாள்
நடந்துவரும் நாளையிலே நல் ஆடி மாதத்திலே
விடிய ஐந்து நாழிகையில் வெந்தியரும் துயில் நீத்து
வெள்ளிக் குடமெடுத்து மேல்திசையை நோக்கிடவே
கங்கை திரட்ட மங்கை கன்னியர் வருகையிலே
மலஜலம் தான் கழிக்க மங்கையரும் தானடக்க
நதிக்கரை மேற்குதிக்கில் நங்கை மலவாதிருக்க
அவ்விடத்தில் நான் தோன்றி அரிவைக்கு புலப்படவே
கண்டு மனமுருகி கன்னியரும் ஸ்நானம் செய்து
கங்கைதிரட்டி மங்கை கடியமலர் தானெடுத்து
வெண்ணுக மரத்தடியில் வீற்றிருக்க எந்தனுக்கு
அன்று முதல் எந்தனுக்கு அனுதினமும் பூஜை செய்தாள்
அன்புடனே செய்த பூஜை யாருமறியார் வையகத்தில்
வெள்ளி உதிக்குமுன்னே விடிய ஐந்து நாழியிலே
ஆருமறியாமல் அரன்பூஜை தான் முடித்தாள்
நாளுக்கு நாளையிலே நாயகியாள் தன் மனத்தில்
வருத்தமடைந்தாளாம் மங்கைப்பருவம் வாய்க்குமென்று
கன்னிப்பருவமது கிட்டிவரும் நாளையிலே
அரன்பூஜை செய்வதற்கு ஆகாதென்று விசனமுற
சிவபூஜை செய்வதற்கு செல்வியும் விசனமுற்று
எண்ணி மனதிலெண்ணி ஏக்கமுறும் நாளையிலே
பங்குனி மாதமையா பதினேந்தாம் நாளையிலே
சுச்கிரவாரத்திலே நித்திரை நேரத்திலே
விடிய ஐந்து நாழிகையில் வஞ்சியும் ருதுவுமானள்
அருகனுதயாதியிலே அனைவரும் வந்தடைந்தார்
வேளாளப் பெண்களெல்லாம் வேணம்பேர் வந்தடைந்தார்

கன்னியர்கள் முகம்நோக்கி கதருராள் மங்கையரும்
அழுதகுரல் கேட்டு மங்கை ஆச்சரியம் தானடைந்தார்
நல்ல சுபதினத்தில் நங்கையே நீ அழுவதேனோ.
மன்தில் இருப்பதை நீ மங்கையே சொல்லுமம்மா
தாயார் ஒருபுறத்தில் தையலரும் கேட்கலுற்றாள்
கொட்டினாள் கண்ணீரை குழம்பலுற்றாள் மங்கையரும்
கமலாங்கினி சிறிய தந்தை கடுகெனவே வந்து நின்று
கண்மணியே கண்மணியே உன் கருத்தில் இருப்பதென்ன
சொல்லுமம்மா யென்றல்லோ தோகையரை கேட்கலுற்றார்
கடுஞ்சினமாய் கேட்கையிலே கன்னியரும் யுரைக்கலுற்றார்
அரன்பூஜை சிவன்பூஜை அரும்பாவி நான் மறந்தேன்
பொல்லாத பாவியானேன் பெரும்பாவி சண்டாளி
ஆகாதப் பாவியானேன் அரும்பாவி சண்டாளி
ஆர்செய்யு போகுருரோ ஆண்டவர் பூஜைதன்னை
எவர்செய்வாரென்று சொல்லி எடுத்துரைத்தாளே நங்கையரும்
கமலாங்கினி உரைத்தமொழி கண்டு அறிந்தார் வேளாளரும்
அறிந்தார் அவனியிலே அரிவையர் தன் மொழியை
பூஜித்த இடங்களெல்லாம் பூவையரே சொல்லுமம்மா
பணிவிடை செய்த இடம் பாவையரே சொல்லுமம்மா
என்று சொல்லி எல்லோரும் இன்பமுடன் கேட்கையிலே
கன்னி எடுத்துரைக்க காட்டினாள் குறிப்பங்கே
தண்ணி தடாக மதில் தழைத்திருக்கும் வெண்ணாகம்
அந்த மரத்தடியில் ஆண்டவரும் வீற்றிருப்பார்
என்றுசொல்ல கேட்டுமவர் ஏகினார் நதிக்கரையும்
சொர்ண வடிவம்போலே தோன்றினேன் அவ்விடத்தில்
பக்கமிருக்கும் அசடுகளை பாலகரும் தானெடுத்து
பச்சை நல் பந்தலிட்டு பலவகை வாத்திய முழங்க
அர்ச்சனை தான் புரிந்து அடிபணிந்தார் வேளாளர்
அரண்மனை தானடந்து அரிவையர்க்கு சொல்லலுற்றார்.
கிரியை முடித்து மங்கை கிருபையுடன் தானிருக்க
அன்றுமுதல் ஈசனுக்கு ஆராதனை பூஜையெல்லாம்
அன்புடனே வேளாளர் அனுதினம் செய்துவர
கண்டார் சமணர்களும் கவலை பெரிதாகி நொந்து
குளிக்கும் இடந்தனிலே கோவிலொன்று கட்டிவைத்தார்
ஸ்நானம் செய்யும் ஜலந்தனிலே சடையானுடைய கூட்டத்தாரும்

பச்சைநல்ல பந்தலிட்டு பரமனையும் உண்டு செய்தார்
கன்னி ஒருத்தியாலே கலகங்கள் ஆனதென்று
மங்கையரை கண்டல்லவோ மானபங்கம் செய்யவேணும்
பங்கத்தை யழித்தவளை பதியை விட்டோட்டவேணும்
கட்டிடும் கோவிலையே கங்கையில் தள்ளவேணும்
என்று சொல்லி சமணர்களும் யோசித்துக் கொண்டிருக்க
அந்தவோர் நாளையிலே அரிவையர் கமலாங்கினி
வெள்ளிக் குடமெடுத்து வேந்தியர் வருகையிலே
பின்தொடர்ந்து சமணர்களும் பெரும் பாதகரேது செய்தார்
கமலாங்கினி நாயகத்தை கையாலே வாரி யெடுத்து
பூந்தோட்டம் தன் அருகில் புகுந்து சமணர்களும்
மாவிருக்ஷம் தன்னடியில் மங்கையரை கற்பழித்தார்
கன்னியரை அங்குவிட்டு கடந்தார் சமணர்களும்
குய்யோ முறையோவென்று கூச்சலிட கமலாங்கினி
அபயகுரலிட்டு நங்கை அழுது புலம்பலுற்றாள்
பின்தொடர்ந்த வேளாளப் பெண்மணிகள் வருகையிலே
கன்னியர் செப்புக் குடத்தை கண்டுமே கன்னியர்கள்
அக்கமும் பக்கமும் சுற்றி அழுதகுரல் தானறிந்து
அழுதகுரல் கேட்டு அவ்விடம் பார்க்கையிலே
தலைவிரி கோலமுடன் தையல் இருக்கையிலே
ஆடையொருபுறத்தில் அவிழ்ந்து இருப்பதையும்
கண்டு மனந்தளர்ந்து கடுகென ஓடிவந்து
கமலாங்கினி மாதாவிடம் கருத்தை வுரைக்கலுற்றார்
ஐயோ மகளே யென்று அவனியில் வீழ்ந்தழுது
குய்யோ முறையோவென கூச்சலிட்டு ஓடிவந்து
வேளாளர் பின்தொடர மெல்லியரும் ஓடிவந்து
நந்தவனம் தான்புகுந்து நாயகியை தான் அறிந்து
மண்ணில் கவிழ்ந்திருந்த மங்கையரை தான் அறிந்து
சொன்ன சொல் கேளாமல் சோரம் புகுந்தாய் பெண்ணே
தாய்மொழியை கேளாது தரையில் படுத்தாயே
அரன்பூசை செய்தருள அழும்புவந்து நேர்ந்ததடி
என்று சொல்லி வேளாளர் ஏகினார் தன் மனைக்கி
கண் திறந்து கன்னியரும் கவலையுடன் தானெழுந்து
பரமரிட ஆலயத்தை பாவையரும் தானடைந்து

ஈசனிட முன்னிலையில் இட்டாள் பெருங்கூச்சல்
மண்ணில் விழுந்து மங்கை மாடுபோல் கதறியழ
மங்குகண் நித்திரையை மங்கையர்க்குண்டு செய்தேன்
கன்னியுட தன் கினவில் கருத்தை உரைக்கலுற்றேன்
கன்னி கழியாத காப்பு நூல் தறியாத
இல்லற வாழ்க்கையிலே இன்பம் இருப்பதினல்
பல்லவராஜனுக்கு பவுத்திரியாய் நீ உதித்து
கஞ்சகிரி மன்னனுக்கு மனைவியா நீயுதித்து
வாழ்ந்துவரும் நாளையிலே வயது அறுபதிலே
பிள்ளையில்லை யென்று நீயும் பெருமூச்சி தானெரிந்து
மைந்தனில்லை யென்றல்லோ மனக்கவலை படும் நாளில்
முப்பத்திரண்டு அரம் முடிப்பாயே பெண்மயிலே
என்னுடைய அருளினலே என் மனைவியை நீ எடுத்து
நதிக்கரையில் கண்டெடுத்து நாயகி வளர்த்திடுவாய்
மைந்தரிருவரையும் மகிழ்ச்சியுடன் தானெடுப்பாய்
பிள்ளைகலி தீர்ந்துபெண்ணே பெருமையுடன் வாழ்ந்திருப்பாய்
உன்னை அழும்பு செய்த சமணர்தனை அதம் செய்வார் மூவருமாய்
அதஞ்செய்யும் நாளையிலே நீ அலங்கத்தின் மேலிருந்து
மைந்தர் செய்யும் கோலமதை மனத்தில் நினைத்துருக
அந்த நல்ல வேளையிலே ஆரணங்கே உந்தனுக்கு
சிவகதி யளிப்பேனென்று சிறுவளுக்கு நானுரைத்தேன்
அறிந்த உமையவளும் அடிபணிந்து அய்யரையும்
சுற்றி வலம்வந்து தொழுது நமஸ்கரித்து
நடக்க சிலவுதாரும் நாயகரே எந்தனுக்கு
சொல்லி விடைபெற்று சுந்தரியும் போகலுற்ருள்

கஞ்சமா நகரம் அம்மையார் ஏகுதல்

மதுரைப் பதியைவிட்டு மன்னரிட வீதி விட்டு
அந்தணர் வீதிவிட்டு அரசர் வீதி தான் நடந்து
வேளாளர் வீதிவிட்டு வேல்நம்பி வீதி வரும்
வணிகருட வீதிவிட்டு வாள்இடையர் வீதி வந்து
தட்டிகொட்டு வேலைசெய்யும் தட்டார வீதி விட்டு
கொட்டிதட்டு வேலைசெய்யும் குயவரிட வீதி விட்டு
மாடோடும் வீதிவிட்டு மன்னர் பதிக்கடந்து
தேரோடும் வீதிவிட்டு தெருக்கோடி தான் நடந்து

அல்லியும் தாமரையும் அடைந்த நதியைவிட்டு
கொட்டியும் தாமரையும் குளக்கரை தான்நடந்து
மல்லி வனங்கடந்து மருகுவனம் தோப்புவிட்டு
காவேறி ஆற்றைவிட்டு கடுக நடக்கலுற்றாள்
காளாம் படர்ந்தவனம் கருங்காலி பூத்தவனம்
சூரைப் படர்ந்தவனம் சொத்தைக்காளாம் பூத்தவனம்
ஒருநாரைக் கிருநாரை ஓலமிடும் வனத்தைவிட்டு
கரடி வுறங்குவனம் காட்டானை தூங்கும் வனம்
சிங்கம் உறங்குவனம் சிறுத்தைப்புலி தூங்கும்வனம்
ஆறு சுனைகடந்து ஆற்றங்கரை தான்கடந்து
குன்று மலைகடந்து குகைவனம் தான்கடந்து
கள்ளர்கள் வாசம்புரியு காறு பொய்கைதாண்டி
இருளர் கொள்ளையடிக்கும் இருண்ட வனங்கள்விட்டு
மாவர் கொள்ளையிடும் மரட்டார் மூட்டார் விட்டாள்
பட்டீச்சுரம் தான்நடந்து பலதேசம் தான்நடந்து
கஞ்சகிரி தன்னருகில் கன்னியரும் வந்தமர்ந்து
நஞ்ச நிலத்தருகே நாயகியும் வந்துநின்று
உற்றுமே நோக்கலுற்றாள் உலகாளும் கன்னியரும்
குயிலோசை மயிலோசை கூவுமிட மறிந்தாள்
நஞ்சை நிலங்கடந்து புஞ்சைநிலம் தான்கடந்து
சமணரிட வீதியிலே சத்தியரும் தானடந்து
ஆகாயத்தை அளாவிய அமணரிட வீதிவந்து
ரகுகுலன் அலங்கமதை நாயகியாள் தான்அரிந்து
பத்தடுக்கு அலங்கமாமே பார்வேந்தன் மண்டபங்கள்
பட்டா பிடித்துநிற்கும் படைவீரரை தானறிந்து
துப்பாக்கி ஏந்திநிற்கும் துரைமகனை தானறிந்து
ஆனைகள் கூட்டமது அணியணியாய் கட்டிருக்கு
பரிக்கூட்டம் மெத்தவுண்டு பார்வதியாள் தானறிந்து
சங்குவதி குளிக்கும் தாமரைத் தடாகம்தேடி
மங்கை ஸ்நானம் புரியுமந்த மல்லிவனம் நாடிவந்து
வாழைமரம் தோப்புகளும் வன்னிமரம் வீதிகளும்
தென்னம்பலா தோப்புகளும் தேக்குமரசாலைகளும்
பாக்குமர சோலைகளும் பனைமர சாலைகளும்
மல்லிவனங் கடந்து மருகுவனம் தான்கடந்து

முல்லைவனம் கடந்து மூங்கில்வனம் கடந்து
அல்லியும் தாமரையும் அமைந்த நதிகடந்து
கொட்டியும் தாமரையும் குளிர்ந்த நதிகடந்து
தாமரை தடாகமதில் தவமழகி வந்துநின்று
நந்தவனத் தினழகை நாயகியாள் தானறிந்து
சங்குவதி குளிக்கும் தடாகப் படிதனிலே
வெள்ளிப்படி தனிலே வீற்றிருக்க வுமையவளும்
அருக னுதயமாக ஆலயத்தில் பெண்களுடன்
தாதியுடன் சங்குவதி ஸ்நானம் செய்ய வருகையிலே
சங்குவதி தன்வரவை சத்தியரும் தானறிந்து
சின்னம் சிறுகுழந்தையாக சிவபெருமான் தேவிதோன்ற
கன்னிக்குழவியாக காங்கேயர் அன்னையாரும்
தங்கத்தை காச்சியல்லோ தரையில் கவிழ்ந்ததுபோல்
பொன்னை உருக்கி அங்கே புடமிகாச்சி வைத்ததுபோல்
வெள்ளியை காச்சியுங்கே வெயிலில் வூற்றியதுபோல்
காலையில் உதயமாகும் கதிரோனை போலிருக்க
அந்தியில் உதயமாகும் சந்திரனைப் போலிருக்க
சங்குவதி தானிரங்கி ஸ்நானம் செய்யும் வேளையிலே
கூக்குரலிட்டழுதாள் கொள்ளிமலை நாயகியும்
அழுதகுரல் கேட்டு மங்கை அலரியே தானெழுந்து
தாமரை இலையிலே தவித்திருந்த வுமையவளை
குயிலோசை கேட்டு மங்கை குதித்து ஜலந்தனிலே
வாரிஎடுத்து மங்கை வளர்பெருகும் கையாலே
தோளோடு தோள் அணைந்து துடர்ந்து அரண்மனையை
பட்டுதுணி யெடுத்து பாலகியை தான்துடைத்து
சாந்துசவ்வாது மிட்டும் தானிருக்கும் வேளையிலே
அறிந்த ரகுகுலனும் அரிவையை கேட்கலுற்றான்
ஆர்பெற்ற புத்திரியோ அகப்பட்ட துன்கையிலே
எவர் பெற்ற புத்திரியை எடுத்துக்கொண்டு வந்ததென்ன
குளிக்கும் இடந்தனிலே குழந்தையைக் கண்டெடுத்தேன்
தாமரை இலைமேலே தையலரைக் கண்டெடுத்தேன்
தண்ணில் பிறக்குமோடி சங்குவதி நாயகமே
குழந்தையை பெற்றவர்கள் குளத்தில் விடுவாளோ
மங்கையை பெற்றவர்கள் வைகையில் விடுவதுண்டோ

தாதிவுரை கேட்டு மன்னன் தன் உள்ளமும் தான் குளிர்ந்து
பிள்ளையில்லை யென்றல்லோ பெருந்தவம் நான் புரிந்து
மைந்தரில்லை யென்றுசொல்லி மனவருத்தம் கொண்டிருந்தேன்
செங்கோல் நடத்தவே சிறுகுழந்தை இல்லையென்று
அவனியை ஆள்வதற்கு ஆண்பிள்ளை இல்லையென்று
கருமம் நடத்துதற்கு காளையில்லை யென்றுசொல்லி
அல்லும் பகலுமாய் அறுபது நாழிகையும்
அருகனை தியானம் செய்து அவர் இணையடியை நான் வணங்கி
அருகனருளாலே அகப்பட்ட பெண் குழந்தை
பத்திரமாய் நீ வளர்ப்பாய் பாவையே சங்குவதி
கட்டளை இட்டு மன்னன் கடந்தான் அரண்மனைக்கு
தாதியுடன் சங்குவதி தான்வளர்த்து வருகையிலே
தங்கத்தால் ஊஞ்சலிட்டு தனிவயிரம் தானிழைத்து
பதினொரு நாள்வரைக்கும் பாவையரும்தான் வளர்த்தாள்
பனிரெண்டாம் நாளையிலே பாதி இரவிலே
நஞ்சரத்து நஞ்சியிடும் நடுசாம வேளையிலே
கல்லோடே கல்லுரையும் காளிவரும் நேரத்திலே
பில்லோடு பில்லலையும் பிடாரிவரும் நேரத்திலே
சமணரிட தன்கினவில் சத்தியரும் தான்தோன்றி
பொல்லாத சொர்ப்பனங்கள் பொற்கொடியும் காட்டலுற்றாள்
ஆகாத சகுணங்களும் அறிவையரும் காட்டலுற்றாள்
ஒவ்வொரு சமணரிடம் ஒவ்வொரு குழவியானாள்
இருபது ஆயிரம்பேர் இக்குழந்தையை தானறிந்தார்
பொல்லா சகுணங்களும் போக்கினாள் சமணருக்கு
கண்டு பயந்தல்லவோ கலகம் மெத்த வுண்டுபண்ணி
பொச்சிரிப்பும் பொறுமையும் பொருந்தி இருக்கையிலே
நாளுக்கு நாளாக நடந்து வருகையிலே
ராஜனிடம் சொல்லலுற்றார் நடந்த விஷய மதை
எடுத்து உரைத்தார்கள் இக்கட்டு வந்ததெல்லாம்
உன்னுடைக் குழந்தை அய்யா ஒவ்வொரு நாள் தினமும்
சொர்ப்பனத்தில் வந்து நின்று தோன்றி மறைகுதையா
அன்றுமுதல் இன்றுவரை அழும்பு வந்து நேர்ந்துதையா
அமணரடியார்க்கு அலகை வந்து நேர்ந்ததையா
என்றவுரைக்கேட்டு மன்னன் இடிவிழுந்து ரகுகுலனு

மந்திரியை நோக்கிமன்னன் மர்மத்தை கேட்கலுற்ருன்
அடிமை யுரைத்தமொழி அறியாயோ மந்திரியே
மன்னவோ மன்னவோ மர்மத்தை சொல்லுகின்றேன்
ஆனகுடிக்குமன்ன அனர்த்தம் வந்து நேர்ந்ததுகாண்
சமணர் குடிக்குமன்ன சங்கடம் நேர்ந்ததுகாண்
என்னிட கினவில் மன்ன எதிரில் வந்து நிற்கக்கண்டேன்
பொல்லாத சொர்ப்பனங்கள் பொருந்தக்கண்டேன் எந்தனுக்கு
அமைச்சனை நோக்கிமன்னன் அறையலுற்ருன் சிலமொழிகள்
மங்கைப் பட்டிணத்திலே மகிழ்பேரு ஜாதகனை
நானழைத்ததாக சொல்லி நீ அழைத்து வாருமந்திரி
அரண்மனையில் தான்புகுந்து அடியவனை தானழைத்து
ஜாதகனை தானழைத்து ஜடுதியில் வருவாயோடா
கடுகநடந்து நீயும் காலையை கூட்டிக்கொண்டு
உத்திரவு தானளிக்க ஓடிவாரான் அடியவனும்
ஜாதகன் வீட்டருகே சமர்த்தனவன் வந்து நின்று
தலைக்கடை வாயல்விட்டு தான்புகுந்தான் அடியவனும்
பண்டிதனும் தானறிந்து பரிவுடன் வந்துநின்று
வாருமையா ஜாதகனே வளம்பெருகும் கஞ்சநகர்
எங்கள் ரகுகுல மன்னருந்தான் ராஜனும் தானழைத்தார்
நல்லது மன்னவனே நான் வருவேனென்று சொல்லி
வழிகூட்டி தானனுப்பி மாளிகையில் தான்புகுந்து
மனைவியுடன் மைந்தரையும் மார்போடணைத்துக்கொண்டு
தப்பிப்பிழைத்தேனுனல் தாலிபரி போகாதடி
பொல்லா சமணரிடம் போய்பிழைப்பதானரிது
ஆகா சமணரோடி அழும்பு செய்ய தான்நினைப்பார்
தப்பிப்பிழைத்தேனுனல் தரணிவந்து சேர்ந்திடுவேன்
தலைதப்பி போனேனுகில் உன் தமயனிடம் சென்றுகண்ணே
வுன்மைந்தர்களைக் காற்றுப்பெண்ணே
மகா சாஸ்த்திரத்தை ஓதிவைப்பாய்
பத்திரமாய் நீ பிழைப்பாய் பாவையரே கண்ணே என்று
கட்டுடன் ஜாதகத்தைக் கடுக எடுத்துக்கொண்டு
தலைகடலில் வாயலிலே ஜாதகனும் வந்து நின்ருன்
தயிரோ தயிரோ வென்னுந் தனிக்குரலைத் தானறிந்து
தெருவாயல் வந்துநின்று தென்மேற்கு பார்க்கலுற்ருன்

கன்னி கழியாப் பெண்கள் கன்னியர்கள் மூவரைத்தான்
கண்டு மனம் நடுங்கி கடுகே வழிநடந்து
ஆறுஜாமனை கடந்து அநேக நகரம்விட்டு
கஞ்சகிரி தன்னகரம் கட்டழகன் வந்து நின்று
அரண்மனை தான்புகுந்து அரசனை தான்வணங்க
ஜாதகனை நோக்கியல்லோ சவிஸ்தாரம் சொல்லலுற்றார்.
என்னுட குழவிக்கு எழுதுமோடா ஜாதகங்கள்
கன்னி குழவிக்கு கணக்கறிந்து பாருமடா
கட்டளையையிட்டு மன்னன் ஒருகாளையைத் தானழைத்து
கேட்டதெல்லாம் தாருமென்று இருமையுடன் தான்மொழிந்தான்
ஓராவ தலங்கமீதில் ஒருபுறத்தில் தானமர்ந்து
பசுஞ்சாணி கொண்டுவந்து பகுத்தானும் பூமியிலே
தண்ணீர் தெளித்துமங்கே தரைக்கோல மிட்டானும்
ஐங்கரரைக் கொண்டுவந்து அமர்த்தியே ஜாதகனும்
மல்லியுடன் முல்லையாமே மருவு இருவாட்சியுடன்
ஐங்கரர்க்கு சாற்றியல்லோ ஆராதனை தான்புரிந்து
கற்பூர ஆலாத்தி கனமுடனே தானெடுத்தான்
கட்டுடனே ஜாதகத்தை கடுகவே தானவிழ்த்து
எட்டி பலகைதனில் எழுதினான் அட்சரத்தை
பன்னிரண்டு அட்சரத்தை பலகைதன்னில் தானெழுதி
மங்கையுட தன்கணக்கை மனமுருகத் தானறிந்து
கண்ணீர் கலங்கவிட்டு கவலைகொண்டான் ஜாதகனும்
உள்ள நடுங்கியவன் வுடம்பெல்லா வேர்வைசிந்த
கைகால் மிகநடுங்க கதறினான் ஜாதகனும்

ஜாதகன் கூறும் விருத்தம்.

உரைத்ததோர் மொழிகளைக் கேட்டு ஜாதகன்
உத்தமி மகிமைகண்டு
உறங்கிடச் சமணர்க ளிருப்பதைக் கண்டுமே
உளமுருக மனதுவாடி
கரத்தினிலிருந்ததோர் ஜாதகந் தன்னையே
கைசோர விட்டுநிற்க.
கண்டிடுஞ் சமணர்கள் பண்டிதனை நோக்கிட
கதறினாரம்மா முன்னே

மறையவ ரோதிடுஞ் சாஸ்திர நூல்கொண்டு
மன்னற்குறைக்கலுற்றான்
மங்கையுமிருப்பதால் ஓராண்டுக் குள்ளவே
மறலியிடஞ் சேருமன்னா
அரண்மனைக் கேகினீ குழவிகளை யேந்தியே
அடவியில் விடுவையாகில்
அடியருடன் சிலநாளிருந்து நீ வாழ்குவை
அரசை தான் புரிவாய்.

அமைச்சர்கள் தானறிந்து அரசனிடம் தானுரைக்க
பண்டிதனை தானழைத்து மண்டபத்தில் கொண்டுவிட
ஜாதகனை அழைத்துச்சென்று ராஜனிடம் கொண்டு வந்தார்
துக்கிட்டமூவதென்ன தோன்றினதை சொல்லுமடா
வுள்ளதை சொல்லுமடா உத்தமியாள் தன் மகிமை
கண்டதை நீ வுரைப்பாய் கதராதே ஜாதகனே
அரசன்மொழி கேட்டுமல்லோ அறைகுவான் ஜாதகனும்
ஓராண்டுக்குள்ளே வய்யா ஒழித்திடுவாள் சமணர்களை
ஈராண்டுக்குள்ளே வய்யா இறந்திடுவார் சமணரெல்லாம்
மாண்டுமடிந்திடுவார் மறலிபதம் சேர்ந்திடுவீர்
துஞ்சிடுவீர் சமணர் முதல் துரைத்தனங்கள் தானறிய
கேட்டவுடன் மன்னவன் கீழ்விழுந்து மூர்ச்சையாகி
மரம்போல தான் கிடந்த மன்னனையும் நோக்கலுற்றான்
அமைச்சன் முதல் சமணர்களும் அரசனை தூக்கிவைத்து
ஆருதலை சொல்லி மந்திரி அரசனை தேற்றினாராம்
தேருதலை சொல்லி மந்திரி தேற்றினாராம் மன்னனையும்
ஜாதகனை நோக்கி மன்னன் சடங்குகள் கேட்கலுற்றான்
தேறுதல் அடைவதற்கு திடமொன்று கூறுமடா
பரிகாரம் சொல்லுமடா பாவையாள் தேறுதற்கு
கன்னியை தாங்கி மன்னா காட்டினில் விட்டாயானால்
காட்டினில் விட்டாயானால் வுன்காலாட் படை தேருமையா
வனத்தினில் விட்டாயானால் மன்னர் படை தேருமையா
இந்த எல்லையிலிருந்தாளானால் இடர் வந்து நேர்ந்திடுமே
மனையில் இருந்தாளானால் இம்மன்னனையும் தோற்றிடுவாள்
வுரைத்த மொழி கேட்டு மன்னன் வுருகி மனம் வாடலுற்று
மனமது வாடினனும் மன்னனையும் நோக்கி மந்திரி
நடக்கு மந்த காரியங்கள் நடக்க சிலவு தாரும்.

சங்குவதி புலம்பல்.

அலங்கத்தின் வுள்ளிருந்த அரிவையரும் தானரிந்து
சங்குவதி தானரிந்தாள் சமணர்கள் வுரைத்தமொழி
உஞ்சலிலே துயின்றதொரு உமையவளை தானெடுத்து
மாரோடணைத்து மங்கை மண்மேல் புரண்டழுது
பொல்லா சமணர்களும் பொருமை கொண்டாரோடி
ஆகா சமணர்களும் ஆகாது என்றுரைத்தாள்
பிள்ளைகலி தீர்க்க வந்த பெருமாட்டி கண் மணியே
மங்கை கலி தீர்க்க வந்த மணி விளக்கே யென் குழந்தாய்
மைந்தனில்லை யென்றல்லோ மாளா தவமிருந்தேன்
பிள்ளையில்லை யென்றல்லோ பெரிய தவமிருந்தேன்
குளிக்குந் தடாகந்தன்னில் குமரியை கண்டெடுத்தேன்
அருகன் கிருபையாலே அகப்பட்டாய் பொய்கை தன்னில்
ஆசையுடன் நான் வளர்க்க அடர் வனத்தில் வுன்னைவிட
உன் தலையில் எழுதி பெண்ணே தண்ணீரில் விட்டாரோடி
மண்டையிலே எழுதியல்லோ வைகையில் விட்டாரோடி
காட்டில் வாழ் மிருகத்துக்கு காளை இரையானாயோடி
வனத்தில் வாழ் மிருகத்துக்கு வாய்க்கிரை யானாயோடி
கட்டி மணம் முடிக்க கல்யாணம் செய்யவிருந்தேன்
மாலையும் சந்தனமும் மகிழ்ச்சியுடன் நானடத்த
எண்ணங் கொண்டிருந்தேனடி என் வயிற்றில் மண்ணரைந்தாய்
அள்ளினன் மண்ணை பெண்ணே அரைந்தாயோ யென்வயிற்றில்
தெள்ளினய் மண்ணை கண்ணே திருவாயில் தானடைக்க
உன்னை விட்டப்படி நான் வுயிர்த்துணிந்து நானிருப்பேன்
என்னை விட்டெப்படியோ எகிதரித்திருப்பாய்
மாரோடே தாணைத்து மங்கைப்புலம்பலுற்றாள்
மண்மேல் கவிழ்ந்து மங்கை மாளாத் துயர முற்றாள்
கடகடென தான் புரண்டு கண்ணீருஞ் சோரவிட்டு
அருகிலிருந்த தாதியரும் அழுது புலம்பியிட
பக்கமிருந்த தாதியரும் பதரி புலம்பவப்போ
வெள்ளாட்டி பெண்களெல்லாம் வேணம்பேர் தானழுக
அழுது இருக்கையிலே அமைச்சனை நோக்கி மன்னன்
குழந்தையை தானெடுத்து கொண்டுவாடா மந்திரியே
கட்டளை அளித்து மன்னன் கவிழ்ந்தானும் பூமியிலே

அரண்மனையும் தான் புகுந்து அமணமந்திரி நிற்கையிலே
அமைச்சனை கண்டு மங்கை அலரி புலம்பலுற்றாள்
மந்திரியே மந்திரியே மனமுங் குளிர்ந்துதடா
உள்ளங் குளிர்ந்துதடா வுடம்பெல்லாம் பூரித்ததடா
உன் எண்ணம் போல் தான் முடித்தாய் எவரறிவார் வையகத்தில்
நானென்றறியே னம்மாவென நயன்றான் மந்திரியும்
அடியாரிட கூட்ட மெல்லாம் அரசனிடம் ஓடினார்கள்
ஜாதகனுரைத்த மொழி சம்மதித்தார் சமணரெல்லாம்
என்னால் நடந்ததென்று இரக்கமாய் பேசவந்தீர்
சொல்லுவது எந்தனையும் தொல்லுலகில் எவர் மதிப்பார்
நீ வந்ததொரு தன் விஷயம் வகையுடன் வுரைப்பாய் மந்திரி
குழந்தையை தானெடுத்து கொலுவுக்கு வாருமென்றார்
கட்டளைகள் விட்டாரம்மா கடந்து சில நாழி ஆச்சு
வாட்டிடுவான் மன்னனவர் வல்லபியே தாருமம்மா
கண்டு நல்ல சங்குவதி கணவன் முகம் சோர்ந்திடுமே
என்று சொல்லி மங்கையரும் ஏந்திழையுந் தானளித்தாள்
கன்னிகையும் தானறிந்து கவிழ்ந்தாளாம் பூமியிலே
மூர்ச்சைகளாகி அங்கே முடியையே சோரவிட்டார்
தாதியரும் ஓடிவந்து சங்குவதியை தானெடுத்து
மாரோடணைத்து நங்கை மங்கையின் முகம் துடைத்தார்.
மந்திரியுந் தானெடுத்து மன்னனிடம் தான் செல்ல
இருகையால் தாவிமன்னன் இட்டானும் முத்தமங்கே
உருவத்தை பார்க்கலுற்று வுருகி மனமதுவாடி
முன்னழகும் பின்னழகும் முகத்தழகும் பார்க்கலுற்று
மனங்கள் கொதிக்க மன்னன் மரகதத்தால் தானிழைத்த
சிம்மாதனத்தில் சாய்ந்து சிரசையும் தொங்கலுற்றான்
அருகிலிருந்த மந்திரியும் அரசனையும் தேற்றினார்கள்
சோக்கம் தெளிந்துமன்னன் சொரிந்தான் சிலமொழிகள்
ஆரடா அமணநந்தி அதிதீவிரமாய் சென்று மந்திரி
குழந்தையை தானெடுத்து இக்குறித்த நகரத்தைவிட்டு
கஞ்சகிரி எல்லை தாண்டி கடந்துசில தூரம் தாண்டி
அடுத்திருக்கும் எல்லையிலே ஆரண்யம் தான் கடந்து
ஈ நுழையா கானகத்தே இக்குழவியை தர்ன் வளர்த்தி
கடுக வருவாயப்பா காளையரே குமண நந்தி

உமையவளை சமணர்கள் விடுவேது

குழந்தையை தானெடுத்து குமண நந்தி ஓடிவாரான்
கஞ்ச நகர் கடந்தான் காடுமலை குன்று கடந்தான்
ஈ நுழையா கானகத்தில் யிருபுறமும் சுற்றிவந்து
வழிகள் அறியாமலே மயங்கிருந்தான் குமணநம்பி
நால் திசையும் சுற்றிப்பார்க்க நல்வழியை தானறிந்து
கிளைவழியை தான்பிடித்து கிட்டினன் சிலதூரம்
ஆனையுட சப்தமது அறிக்கையது தானுமிட
கரடிபுலி சிங்கமோசை காலையவன் தானறிந்து
ஆனையடிகளெல்லாம் அணி அணியாய் தானறிந்து
கல்லால விருக்ஷமதை கண்டறிந்த குமண நந்தி
ஆகாயத்தை கிட்டியிருக்கும் ஆல விருக்ஷமதை
அந்த மரத்தடியில் அம்மையரை தான் வளர்த்தி
கொஞ்சி தழையொடித்து கொண்டுவந்து மெத்தையிட்டு
அண்டையிலிருக்குமந்த அழகுபெரும் சரக்கொன்னை
கொன்னை மரத்தடியில் குழந்தையை தான் வளர்த்தி
மஞ்சம்புல்லை கிடத்தி மதலைக்கி மெத்தையிட்டு
சரக்கொன்னை யினடியில் சத்தியரை தான் வளர்த்தி
உற்றுமே நோக்கியவன் உன்தலை விதியோ யென்று
பத்திரமாய் இருப்பாய் பாவையரே என்று கூறி
காட்டை கடந்து மன்னன் கடுக நடநடந்து
ஓட்டம் பெருநடையாய் ஓடிவந்தான் குமண நந்தி
ஆற்றிலே ஸ்நானம் செய்து அரசனிடம் வந்துநின்று
நடந்த விஷயமெல்லாம் நவின்றான் அரசனுக்கு
அரசனும் மந்திரியும் அனைவரும் தானெழுந்து
பொய்கை நதியடைந்து புனல்கங்கை நீராடி
வைகை நதியடைந்து வடிவழகி துக்கமற
ஆற்றிலே குளித்துமவர் அமணர்களும் வந்தடைந்தார்
சங்குவதி நாயகத்தை தாதிமார் தானெழுப்பி
மண்ணில் கிடந்த மங்கை வனத்தினில் சென்றுதம்மா
கங்கையில் கிடைத்த கன்னி காட்டினில் சென்றுதம்மா
நீரோடே வந்தகன்னி நிலத்தோடே சென்றுதம்மா
போனது வாருதம்மா பொய்கை ஸ்நானம் தான் முடிப்பாய்
வைகை நீராடியம்மா மனக்கவலை தானொழிப்பாய்

வாருமம்மா வென்று சொல்லி வைகை ஸ்நானம் தான்முடித்து
கவலையை தானொழித்து கன்னியர்க ளனைவரும்
இருக்குமந்த வேளையிலே ஈஸ்வரியாள் காட்டிற்குள்ளே
அருகன் மரைந்தாளும் ஆரண்ய காட்டிற்குள்ளே
காட்டிலுள்ள மிருகங்களும் கதருதுபார் அந்நேரம்
ஆனை சிறுத்தையெல்லாம் அலறுதுபார் அந்நேரம்
அம்மையார் தானறிந்து அமர்ந்திருக்கும் வேளையிலே

அம்மையாரை மலையரைய மைந்தர்கள் கண்டெடுப்பது.

கஞ்சநகர்தனிலே கால மலையரையர்
பதின்மூன்று வீட்டுக்காரர் பலரும் தானடந்து
அங்கம் பிழைக்க அய்யா அனைவரும் போவதுண்டு
வயிறு பிழைக்கவேண்டி வருவதுண்டு வனத்தின்வழி
ஆரண்யந் தான்கடந்து அப்புர மிருக்குமந்த
செங்கோட்டை மடுதனிலே ஜீவனங்கள் செய்வதுண்டு
அநேக ஆண்டுகளாய் அனுபவித்து தான் வருக
அன்றை தினத்திலேயே அறுகவை யமுமெடுத்து
தோளின் மணிவலையாம் தொங்கின புட்டியுடன்
அரண்மனையை விட்டல்லோ ஆரண்யம் தான் நடக்க
அறிந்தாள் உமையவளும் அரசர் வரவை நோக்கி
தந்தைகள் வாராரென்று வடிவழகி தானழுக
குரலோசை இட்டழுக கொள்ளிமலை நாயகியாள்
குழந்தைகுரல் தானறிந்த கோபால கோத்திரத்தார்
மணிவலையை கீழிட்டுமே மரத்தடியில் ஓடிவந்து
கல்லால விருக்ஷத்தண்டை காலால் தடவினார்கள்
கன்னியரும் தானறிந்து காளைகள் அறியும்வண்ணம்
மயிலோசை காட்டிடவே மலையரைய மைந்தருக்கு
சரக்கொன்னை மரத்தடியில் தாவினார் மலையரையர்
தங்கதிரு மேனிபோல தானுதித்த உமையவளை
மார்போடே யணைத்து மன்னவரும் உற்றுநோக்கி
யாருடையக் குழந்தையோதான் ஆரண்யந் தன்னிலழ
நடப்பது நாமறியோம் நாதனுட செயலிதுவோ
உள்ளம் நடுங்கி மன்னர் உத்தமியை தானெடுத்து
நடந்தாராம் வீட்டிற்கு நடுச்சாம நேரமதில்

அரண்மனையை தான்கடந்த அன்புள்ள பதின்மூவர்
மலையரைய மங்கையரும் வனக்குயிலை தானெடுத்து
நான் வளர்ப்பேனென்று சொல்லி நாயகிமார் வாதமிட
அறிந்தார் மலையரையர் அருகன் வுதயாதிமுன்னே
சொல்லுவேன் மங்கையரே துயிலுரங்கும் தேவியரே
நித்திரைகள் தான் புரிந்தார் நினைவுகள் மாறுமட்டும்
அருகன் உதயமானுன் அறிந்தார் மலையரையர்
மங்கையரை தானழைத்து மத்தியஸ்தம் செய்யலுற்ருன்
காட்டிலகப்பட்டதினுல் கன்னியர் பொதுவுமென்ருர்
வனத்தி லகப்பட்டதினுல் மங்கை பொதுவுமென்ருர்
உண்பவும் தின்பவும் ஊட்டிடுவார் அநேகம்
கட்டுதிட்டம் தான்புரிந்து கன்னியர்க்கு நாமமிட
உற்றுமே நோக்கினுராம் உலாவினுராம் தன் மனத்தில்
பக்குவமாய் தானறிந்து பார்வதிக்கு நாமம்சூட்ட
தாயர்ருலகமாதா தவமழகி யென்று வைத்தார்
மாதா வுலகம்ாதா மாமணியே ரத்தினமே
திருநாமம் சூட்டியவர் தேவியை தான் வளர்க்க
மலையரையர் வீட்டிலேதான் மங்கை வளர்ந்திருக்க
நாளுக்கு நாளாமே நாயகி வளர்ந்திருக்க

விருத்தம்.

சங்கரனுரைத்ததோர் மொழிகளைக் கேட்டுநீ
சம்பந்தர் கைலைக்கேகி
தமையனை யழைத்துமே மதுரைநகர் வந்திருவர்
தங்கினுரங்கு சிலநாள்
அங்ஙனம் மீண்டுமே கானகஞ் சென்றுதான்
அடைந்தனர் கஞ்ச நகரில்
அத்தியும் தாமரையடைந்ததோர் பொய்கையில்
அண்ணரா யவதரித்து
வங்கண. நாட்டுளார் அமணருட தேவிகள்
வந்தனர் பொய்கை தன்னில்
வஞ்சியர்கள் சங்குவதி யிருவரை யெடுத்துமே
வளமுடன் தான்வளர்க்க
எங்கள் குலதெய்வமே எடுத்துரைத்தாரண்ணல்
ஏதமில் சின்னண்ணனென்று

எகிவருஞ் சமணரை ஆவியை யொழித்தவா என்
அண்ணன் சின்னண்ணன் துறையே.

அன்னை பிதாவுன்னை யிருவரும் போற்றிட
அனைவரும் துதித்து நிற்க
அகோர வீரருட னீராண்டில் அண்ணராய்
அனைவரும் கொண்டாடவே
எண்ணம் முடிக்கவே அமணர் குல வேந்தனைய்
எவியே கஞ்சகிரியில்
எதிர்த்துமே குண்டரை அதஞ்செய்யும் வீரனைய்
எகினைய் பலர் புகழவே
உனதருள் மொழிகளைக் கேட்டிட ஜாதகன்
உத்தமி மகிமை கண்டு
உறங்கிடச் சமணர்களிருப்பதைக் கண்டுமே
உளமுருகி மனது வாடி
தண்ணந்தனிந்த நின்னுணமேன்மை என்னாலே
சாற்றவும் ஆகுமோதான்
சற்குணனென்றுமே யரிவரும் போற்றிடும்
என் அண்ணன் சின்னண்ணன் துறையே.

அண்ணவர் இருவரும் அரக்கன் இடம் போர் புரிவது

ஆதிகயி லாயமதில் அரனிட வாசலிலே
ஜோதிகையி லாயமதில் சுந்திரனுர் தன்னருகில்
அண்ணர் இருவருந்தான் அடிபணிந்தார் ஈசரைதான்
ஆகாய மார்க்கமாகி அண்ணரது தான் கிளம்பி
ஆரண்யம் தான் கடந்து அடர்ந்த வனங்கள் வந்தார்
வேதாரண்யம் கானகத்தில் வேந்தரவர் தானிரங்கி
ஈ நுழையா காடாமே இருண்ட வனங்கள் ஒன்றும்
ஆனை கரடியுடன் அடர்ந்த வனங்கள் வந்தார்
அந்த வனந்தனிலே அண்ணரிருவருந்தான்
ஆனை எலும்புகளும் அணி அணியாய் கொட்டிருக்க
மனிதர் எலும்புகளும் மலையாய் குவித்திருக்க
அண்ணர் வருகையிலே இளையவருந் தானறிந்து
அண்ணுவே அண்ணுவே இது ஆருடைய வனந்தானே
அறிய உறையுமைய்யா ஆரண்யந் தன் பெருமை

தெரிய விரையுமையா தேசத்தின் தன் பெருமை
இளையவரை நோக்கியல்லோ எடுத்துரைப்பார் அண்ணரவர்
பொல்லாத அரக்கனோடா பெரும்பூசை செய்தவனே
மூர்க்கன் எனும் பேருடைய மூடனிட வனமிதுவே
சிரசு பருவதமாம் சீருடம்பு பெருங்குன்று
கண்களோ கல்மலைகள் கடைவாயோ மூன்று முழம்
நாக்கு நிகண்டிருக்கும் நடுமூக்கு மூன்று முழம்
கைகள் பனைமரமே கால்களோ தென்னமரம்
பொல்லா அரக்களிட பெருவனம் என்றறிவாம்
ஆனையைக் கண்டானால் அறைந்திடுவான் கன்னமதில்
மனிதரை கண்டானாகில் வாக்கிரை புசித்திடுவான்
இந்த வனந்தனிலே இருந்த முனிவரையெல்லாம்
அடித்து புசித்தானே அரும்பாவிசூரனவன்
காட்டு மிருகமெல்லாம் கண்டித்து தின்றிடுவான்
என்றுமே அண்ணரவர் இளையவனுக்கு தானுரக்க
அண்ணன் விரைகேட்டு அசைந்தான் இளையவனும்
அஞ்சி நடுங்கியல்லோ அண்ணனை கேட்கலுற்றான்
இந்த வனந்தனிலே எதற்காக வந்தோமோ
ஆதிகைபி லாயமதில் அரக்கனிட துன்பமதை
தேவர் முனிவரெல்லாம் தேவனிடம் தானுரைக்க
அவனை அழிக்கவேண்டி அடைந்தோமே இவ்வனமே
பார்ப்பதற்காகவல்லோ பாலவனம் இன்றுவந்தோம்
பொல்லா வனங்களண்ணு போய்விடுவோம் என்று சொல்லி
நடந்தா ரிருவருமே இராக்கதன் காட்டிற்குள்ளே
குன்றுமேல் தானிருந்து குழந்தைகளை தானறிந்து
இளம்பிள்ளை தான் கரியை இன்பமுடன் பொசிக்க
பார்த்து அரக்கனவன் பாலர்முன்னே பாய்ந்துநின்று
ஆரடா சிறுவர்களே அடர்வனங்கள் வந்ததென்ன
பாலர் முகத்தையல்லோ பார்த்து அரக்கனவன்
முன்னழகும் பின்னழகும் முகத்தழகும் பார்க்கலுற்றான்
மனது குளிர்ந்தரக்கன் மன்னரையும் தானெடுத்து
இடதுகையால் தாவியல்லோ இளைஞரை தோளிலேற்றி
தங்குகுகை சென்று தமையர் இருவரையும்
இன்று பகல் கழித்து. இருவரையும் தான் புசிப்போம்

என்று மனதிலெண்ணி எகி நடநடந்தான்
அரக்கன் நடக்கையில் அண்ணர் இருவருமே
அபயகுரலுடனே ஆண்டவனை தான் நினைத்து
ஈசரை தான் துதித்து இட்டார்பெருங் கூச்சலுடன்
ஆபத்தை தானறிந்த ஆறுமுகன் தந்தையாரும்
சிவகணத்தை தானழைத்து சிறுவருக்கு ஒதலுற்று
பட்டாவும் வாள் எடுத்து பாலரிடம் தானளிக்க
பட்டா வலதுகையில் மற்றொருகை வாள்பிடித்து
அரக்கன் பிடரியைத்தான் அரிந்தாரே அண்ணமாரும்
வாளாயுதத்தாலே வகுந்தாரே அரக்கனையும்
பூமியிலே தான்விழுந்து புரண்டு அரக்கனவன்
இரத்த ஆர் பெருகுதுபார் இரணக்களங்கள் சூழுதுபார்
புதியார் பெருகையிலே உத்தமரை அரக்கன்
அய்யா சிறுவர்களே அடியேனிட் விண்ணப்பம்
இந்த வனந்தனிலே யாருமில்லை எந்தனுக்கு
பாரவனந்தனிலே பக்கத்துணை யாருமில்லை
ஆவிதுரந்த பின்னர் அடைக்கலங்கள் செய்வீர் முன்னே
என்னை எடுத்துமண்ணு என் கிரியை தான்முடியும்
ஈமக்கடனை யெல்லாம் எனக்கு முடித்திடுவாய்
இருவரையும் தான் வணங்கி எமலோகம் தானடைய
அண்ணரிருவருமே அடர்வனம் தான்புகுந்து
கட்டை முட்டை தேடிவந்து கபடனை தான் அடுக்கி
சக்கிமுக்கி கல்லினாலே தணலா யெறித்திடுவார்
ஈமக் கடன்களை இருவருந் தான் முடித்து
அரக்கன் வனம் கடந்து அண்ணர் வருகையிலே
அஞ்சிடும் நகரவாசி அண்ணரையுந் தானறிந்து
ஆரய்யா சிறுவர்களே அரக்கர்வனம் வந்ததென்ன
அரக்கனை கண்டதென்ன அலறிய சப்தமென்ன
ஆரய்யா யுரையுமைய்யா அறியாத பாலகரே
என்ற உரை கேட்டல்லவோ ஏது செய்தார் அண்ணர்வர்
வந்த அசுரனையே வாளாலே வெட்டிவிட்டோம்
நடத்தினோம் ஈமக்கடன் நடந்தோமே நாட்டைவிட்டு
என்றுரையை கேட்டுவாசி இருவரையும் தான் தழுவி
அரண்மனை சென்றல்லோ ஆனந்தம் தானடைந்தார்

காட்டு கனிவர்க்கம் கடம்பைபால் கொண்டுவந்தார்
பலவித கனிவர்க்கம் பாலருக்கு தானளித்தார்
உண்டு பசியாறி அல்லோ உறங்கியே அன்றிரவு
மறுதினம் காலையிலே மன்னவருந் தானெழுந்து
அந்த நகரைவிட்டு அடர்ந்த வனங்கடந்து
மரட்டார் முரட்டார் மகாவனந் தான் கடந்து
ஆறுகளை கடந்து அடர்ந்த தோப்பை தான் நடந்து
குன்றுமலை தான் நடந்து குகையும் வனம் தான் நடந்து
பட்டீச்சுரம் தான் கடந்து பலதேசம் தான் நடந்து
பெண்ணரசு தான்புரியும் பெண்மதுரை தேடிவாரார்
ஆலவாய் சொக்கரையும் அண்ணரவர் தேடிவாரார்
தென்மதுரை வீதியிலே தேவர் இருவருந்தான்
சொக்கரிட ஆலயத்தை தொழுது இருவருமே
தங்கினர் அவ்விடமே சர்வேஸ்வரன் அருகினிலே
அங்கு சிலநாள்கள் ஆண்டவன் சன்னதியில்
காலம் கழித்துமே காளை இருவருமே

அண்ணர் இருவரும் மதுரைவிட்டு கஞ்சகிரி ஏகல்,
இடும்பன் கடம்பன் வனம்போகிறது.

மதுரைப் பதியைவிட்டு வாராரே அண்ணமாரும்
தென்மதுரை வீதியல்லோ தேவருந் தான் கடந்து
நதியா நதிக்கரையாம் நயன்றூர் இருவருமே
வைகை நதிக்கரையை வடிவழகர் தான் கடந்து
காடுமலை கடந்து காறாறு பொய்கைவிட்டார்
அநேக நகரந் தாண்டி அடர்ந்தமா தோப்பை விட்டு
தென்காசி வீதிவழி திசைதனை நோக்கி வாரார்
ஆலவிருக்ஷங்களாம் அய்யனர் அப்பன் கோவில்
அன்றிரவு தங்கியல்லோ அதிகாலையில் தானெழுந்து
குற்றாளம் ஆற்றங்கரை குமரரும் தான் குளித்து
அரன்பூசை தான்முடித்து அளாவிருக்கும் கிரிகடந்து
ஆகாயத்தை அளாவிய அம்மலையை தானறிந்து
மேகத்து உள்ளிருக்கும் மேருமலை ஒப்புள்ளதே
அந்த மலைதனிலே அண்ணர் இருவருமே
உச்சியில் தான் நடந்து உயரமலை நோக்கலுற்றார்

ஓங்கி வளர்ந்திருக்கும் உயரமுள்ள விருக்ஷமதை
கண்கண்ட தூரமட்டும் காணுதுபார் அண்ணருக்கு
இந்த வனங்களது யாருடைய தண்ணுவென

அண்ணர் இளையவர்க்கு வனம் பெருமை சொல்லுவது

அறிந்தான் தமையன்மொழி அகோர வீரபத்திரர்
கடம்பன் இடும்பன் வனம் காளை இருவருந்தான்
அண்ணன் தம்பி இருவரும் ஆண்டிருந்த ஆரண்யம்
தேவர்முதல் முனிவர்களை திரட்டியுண்ண தீரனவன்
மானிடர் முதலானதுவை மடித்து தின்ற அரக்கனவன்
இருக்குமந்த வேளையிலே இடும்பனவ னெறிந்தான்
நடத்தின காரியங்கள் நயன்றான் இடும்பனவன்
மனவருத்த முற்றல்லவோ மண்ணினில் தான் படுத்து
யாரால் முடியுமையா என் வினையை தீர்ப்பதற்கு
எண்ணி மனங்கள்வாடி ஏகினன் இடும்பனவன்
இருந்த வனத்தைவிட்டு ஏகி வடதிசையை
வடக்கைலை நோக்கி மூர்க்கன் வனங்களும் தான் கடந்து
அகஸ்தியர் முனிவரிடம் அருகினில் வந்து நின்று
முக்கால் வலமும் வந்து முடிவணங்கி தெண்டனிட்டு
நாற்கால் வலம்புரிந்து நடுங்கியே அடிபணிய
ஆரடா அரக்காவென அருமுனி கேட்கவுர
உள்ளம் நடுங்கி சூரன் வுரைப்பான் சிலமொழிகள்
தெற்கேவெகு தூரமைய்யா தென்னாடு சீமையென்பார்
குற்றாளம் தன் மலைக்கி கீழ்புரம் உற்றவனே
நாங்கள் இருவருமே இராக்கதர் கூட்டமையா
அனேக வருஷகாலம் ஆளடித்து தின்றுவந்தோம்
கொல்லுவதும் தின்பதுவும் குடிகொண்ட தெங்களுக்கு
கார்க்க கடனுனக்கு கடவுளரே யென்றுரைத்து
அடியில் வீழ்ந்துமே அலரினன் முனிவர் முன்னே
அரக்கனை நோக்கிமுனி அறிக்கலிட்டார் சிலமொழிகள்
வடதிசை நோக்கி சென்று வளர்பெருகும் ஆரண்யத்தில்
பூவரசம் தோப்புவுண்டு பொருந்திய இரட்டைமலை
தங்கத்திரு மேனியைப்போல் தழைத்திருக்கும் அம்மலையை
அசைக்கியே கையாலே அம்மலையை தான் தூக்கி

அடையுமோடா நின்னகரம் அருமுனி ஓதலுற்றார்
அந்த கிரிதனிலே ஆறுமுக சாமியாரும்
அருள்கொடுப்பா ருந்தனுக்கு அவரடியில் வாழ்ந்திடுவாய்
என்றுரை கேட்டு சூரன் ஏகினன் வடதிசையை
பூவரசன் தோப்பருகில் புகுந்தான் அரக்கனவன்
அருகில் இருந்த மலை அம்மலைத் தன்னருகில்
அடியோடே பேர்த் தெடுத்து அருமுனிவருரைத்தது போல்
இட்டானும் காவடியாய் இருமலையை தோளி விட்டு
காவடியை தோளிலிட்டு காடு மலை குன்று கடந்து
மலைக்காவடி தூக்கி வனமாம் வனங்கடந்து
தென்திசை நோக்கி இடும்பன் தீவிரமாய் தானடந்து
நடந்து வந்து தான் இளைப்பால் காவடியை கீழே வைத்து
இளைப்பாரி எடுக்கையிலே அழுத்தினர் ஆறுமுகம்
இருகையால் அம்மலையை எடுக்க முடியாது
மண்டிட்டு மலையை இரண்டும் மார்போடே தான் தழுவி
கோபக்குறிகாட்டி குன்றையும் தூக்கலுற்றான்
எடுக்க முடியாமல் ஏங்கி திகைத்து நிற்கி
அம்மலை மீதிலேறி ஆராய்ந்து பார்க்கலுற்றான்
நான்குதிசை நோக்கியல்லோ நடுவிலுள்ள குன்றுதன்னில்
ஆறுமுகம் பன்னிருகையும் ஒருடலும் கண்டு நின்றான்
சின்னஞ்சிறு குழந்தையாக திருவடியை கண்டறிந்தான்
புனித்த புருவமும் புஞ்சிரிப்பு தன் முகமும்
கண்டு மனம் நடுங்கி கவலையுற்று அரக்கனவன்
அடிபணிந்து அரக்கனவன் ஆறுமுகர் தன்னடியில்
அண்ணரிட அடிமையடா ஆண்டிருந்த தன் வனமே
அண்ணர் உரைத்தமொழி அன்புடனே தானரிந்து
ஆரண்யம் தான் நடந்து அவ்வனத்தை துறந்து
காட்டு கனிவர்க்கம் கடவுளரும் தான்புசித்து
அரக்கர் வனங்கடந்து அநேக நகரங் கடந்து
தென்மேற்கு தான்திசையை சிறுவரவர் வந்தடைந்தார்

அண்ணமார் கஞ்சகிரிக்கு ஏகுவது.

கஞ்சகிரி எல்லையிலே காளை இருவருந்தான்
கஞ்சை நிலமறிந்தார் நான்குவித தோப்பரிந்தார்.

மயிலும் குயிலுடனே மாப்புறுவுடனே
நச்சுபொய்கை கடந்து நகரத்தை ஏகியல்லோ
அமணருடைய வீதியை அண்ணரும் தான்கடந்து
ரகுகுலன் அலங்கமதை ராஜனிட மண்டபமும்
அண்ணரிருவருமாய் அலங்கமதை கடந்து சென்று
சங்கு குளிக்கும் தாமரை தடாகம் தேடி
மங்கை குளிக்கும் நல்ல மல்லிகை வனந்தனிலே
மயிலும் குயிலோசை மைந்தர்களும் தானறிந்து
சந்தண விருக்ஷத்தடியில் சாய்ந்து இருவருமாய்
மாலே பொழுதிலே மங்கையும் தாதியுடன்
ஸ்நானம்செய்ய மாதங்கே தையலும் வந்ததையே
சங்குவதி தன்வரவை சமர்த்தரும் தானறிந்து
சின்னர் சிறு குழந்தையானர் சிவபெருமான் புத்திரரும்
மைந்தர் குழவியானர் மல்லிகை வனமதிலே
தாமரை இலையிலே தவித்திருக்க இருவருமே
கங்கைவரையிலுள்ள கன்னியரும் தானறிந்து
கூக்குரலிட்ட பாலர் குயிலோசை கேட்டல்லவோ
அழுதகுரல் கேட்டல்லோ அலரியே ஓடிச்சென்று
மல்லிகை வனமுழுவதும் மங்கையரும் தேடி தேடி
கங்கையை நோக்கி மங்கை கருத்துடன் பார்க்கையிலே
சூரியனைப்போல் துலங்கும் சிறுவரைக் கண்டாளே
குதித்தாள் ஜலந்தனிலே குதூகலம் தான்பெருக
தாதிஒரு புறத்தில் தான்குதித்து சென்றுமேதான்
தாதியுடன் சங்குவதி தாவினல் குழந்தைகளே
தோளினின் மேலேற்றி துடைத்தாள் முகங்களேயும்
மாரோடே மாரணைத்து மாளிகைக்கு தானடக்க
அரண்மனையை தான்சென்று அரசனுக்கு தானுரைக்க
ரகுகுலன் தானறிந்து ராஜர் இருவரையும்
ஆளுடையப் புத்திரர்கள் அகப்பட்டார் வந்தனிடம்
எவர்பெற்ற மைந்தரடி எடுத்துவந்தாய் ஏந்திழையே
முந்தியே பெண்குழந்தை உத்தமியே தானெடுத்தாய்
உள்ளதை சொல்லும் கண்ணே உரைப்பாயே எந்தனுக்கே
உற்றதை சொல்லாவிடில் உடைவாளால் வீசிடுவேன்
கண்டதை சொல்லாவிடில் கட்டுவத்தால் கொன்றிடுவேன்

குளிக்கும் இடந்தனிலே குழந்தை மிதக்கக்கண்டு
தாவிஎடுத்தேன் மன்னு தமையர் இருவரையும்
உரைத்தமொழியைக் கேட்டு உத்தமியை தான் நோக்கி
மைந்தர் இருவரையும் மன்னவன் தானெடுத்து
வாரி எடுத்தல்லவோ வடிவத்தை நோக்கலுற்றான்
உச்சியை முகந்துமே உடம்பெல்லாம் முத்தமிட்டு
மைந்தரில்லை யெனவே மனவருத்த முற்றிருந்தேன்
செங்கோல் நடத்துதற்கு சிறுகுழந்தை இல்லையென்று
அருகன் கிருபையாலே ஆண்குழந்தை கிடைத்ததென்று
மனமும் குளிர்ந்துமே மன்னன் மங்கையரை நோக்கி
பத்திரமாய் நீ கார்ப்பாய் பாவையரே சங்குவதி
கட்டுதிட்டம் தான்செய்து கன்னியுடன் தாதியருக்கு
பன்னீரால் ஸ்நானம் செய்து பட்டால் தலை துடைத்து
வஜ்ஜிரம் தானிழைத்த நவரத்தின தொட்டிலேதான்
அண்ணர் இருவரையும் ஆலாத்தி பெண்களுடன்
நாளுக்கு நாளாக நாயகியும் தான்வளர்க்க
வளர்த்து வரும் நாளையிலே மைந்தருக்கு ஜாதகமே
ஜாதகனை தானழைத்து சவிஸ்தாரம் கேட்கையிலே
கண்டு தெளிந்துமே கருத்துள்ள ஜாதகனும்
வில்லாலழகு மன்னர் வீரமுள்ள சூராவர்
கணையாலழகு மன்னர் காளையிருவரும்
அழகில் மிகுந்தமன்னர் ஆண்மையுள்ள வீராவர்
படைக்கு தலைவகிப்பார் பாலர் இருவருமே
எட்டாம் ஆண்டிலே எதிர்த்துமே போர் புரிவார்
அண்ணன் சின்னண்ணனென்று அழையுமையா நாமதேயம்
இவர் பெருமையை விரிக்க என்னால் முடியாது
அண்ணர் பெருமையை அளவிடமுடியாது
மனது மகிழ்ந்து மன்னன் மாளிகையில் தான்புகுந்து
அறுவது பொன்னளித்து ஆபரணம் தானளித்து
பட்டு பிதாம்பரமும் பரிசளித்தான் ஜாதகனுக்கு
தெண்டனிட்டு ஜாதகனும் தன் நகரம் ஏகினனும்
ஓராண்டு சென்ற தங்கே வூத்தம்ராம் அண்ணருக்கு
ஈராண்டு நடக்குது இளைஞர் இருவருக்கும்
மூன்றும் ஆண்டுகளும் முடிந்தது அண்ணருக்கு

நான்காம் ஆண்டுமது நடந்ததாம் அண்ணருக்கு
தவிழ்ந்து விளையாடி ரகுகுலன் மாளிகையில்
சங்குவதி தாதியுடன் தானறிந்தாள் அற்புதத்தை
பச்சைகிளி ஓசையைப்போல் பாலர்மொழிதான் கேட்டு
மயிலோசையைப்போல் மங்கையரும் தான்கேட்டு
உள்ளம் மகிழ்ந்து மங்கை உடம்பெல்லாம் பூரித்து
ஐந்தாவது ஆண்டு அண்ணருக்கு நடக்க
அறிந்த ரகுகுலனும் அரிவையரை நோக்கி
பெண்ணே நாயகமே பெருமாட்டி எந்தன் கண்ணே
கண்மணியே சங்குவதி காளை இருவரையும்
கல்வி பதியணுமே காளைகளுக்கு இப்போது
மந்திரியை அழைத்து மர்மத்தை சொல்லலுற்றான்

விருத்தம்.

கொஞ்சியிடும் வஞ்சியர்களிருவரை குளிப்பாட்டிக்
கோதி மயிர் சிக்குடைத்து
கோமேதகந் தானிழைத்த ரத்ன கிரீடமும்
கொண்டுமுடி சாத்தி நிற்க
ஊஞ்சலிலிருவரை யமர்த்தியே மங்கையர்கள்
உயர்ந்த ஆபரணஞ் சூட்டி
உத்தமக் காதினில் ரத்ன கடுக்கனும்
உயர்வயிர பூணநூலும்
மிஞ்சியிடும் மின்னல்போல் ஒளிவீசு ஜல்லடம்
மிகுதட்டி காப்புமிட்டார்
மிளிர்மரகதஞ் சொலிகளை யாழி மோதிரம்
மிக்கவே போட்டுவைத்தார்
தஞ்சமா முன்றந்தை சிம்மாதனமெனும்
தகத்தினிலேற்றி வைத்தார்
தங்கமுடிதரித்த வீரனே எங்கள்
அண்ணன் சின்னண்ணன் துரையே

அண்ணமார் இருவரையும் கல்வியில் விடுவது.

நாளைய தினத்திலே நகரை அலங்காரம் செய்து
மன்னனுரையை கேட்டு மந்திரியும் தானறிந்து
அடியார் தன்னாலே அவனியில் பறைசாற்றி

அலங்கமுதல்கொண்டு அமைத்தாரே பந்தலது
வாழைமரத்தாலே வாசலெல்லாம் பந்தலிட்டார்
தேக்குமரத்தாலே தெருவெல்லாம் பந்தலிட்டு
பாக்குமரத்தாலே பக்குவமாய் அமைத்து
அரசிலை தோரணங்கள் அமைத்தாரே பந்தலிலே
மாவிலை தோரணங்கள் மாடவீதி முழுதும்
தண்ணீர் தெளித்து மங்கை தரைக்கோலந் தானுமிட்டார்
அமைச்சனை தானழைத்து அமைத்த பட்டத்து யானை
ஆனைமேலேறி அம்பாரி அண்ணருக்குக் கட்டுவைத்து
பவழத்தால் காலிட்டு படிகத்தால் மேல்முடி
வயிரத்தால் தானிழைத்த மணிமுடி ஆபரணங்களும்
அணியாய் அணிவகுத்து அண்ணர் இருவருக்கு
தப்பட்டையுடனே தணிமுரசு வாத்தியங்கள்
புள்ளாங்குழலுடனே பூரி எக்காளையுடன்
நாகசுரத்துடனே நல்வாத்திய முழங்க
கிண்கட்டு வாத்தியமும் கிளர்நெட்டு வாத்தியமும்
முப்பத்திரண்டு வாத்தியமும் முழங்கவே கஞ்சையிலே
பல்லாண்டு கூறும் பெண்கள் பலமாக தானமர்த்தி
வேதமது ஓதும் வேந்தனரை தானமர்த்தி
தட்டுவரிசையுடன் தனித்தனி தானமர்த்தி
சங்குவதி நாயகியும் தனயர் இருவருக்கும்
பன்னீரால் குளியவிட்டு பக்குவமாய் தான்துடைத்து
சந்தண சீப்பினாலே தலைக்கோரி தான்முடித்து
சாந்து சவ்வாதுடனே சந்தணக்காப்பு மிட்டு
காப்புகொலுசுடனே கணையாழி தானுமிட்டு
வயிரத்தால் தான்பதிந்த வயிரப் பூணூலுமிட்டு
மாணிக்கத்தால் தானிழைத்த மார்பினில் மதானி இட்டு
முத்துமுடி அமைத்து முடித்து அழகுடனே
இரத்தின கடுக்கனும் பாலருக்கு பூட்டியல்லோ
தங்கத்தாலே இழைத்த சல்லடங்கள் தானமைத்து
கல்லிழைத்த கச்சையரை கண்மணிக்கு தானுமிட்டு
வெள்ளி மிதியடியும் வேந்தருக்கு பூட்டியல்லோ
முல்லைமலர்மாலை முடித்து சிறுவருக்கு
சிம்மாசனத்தின்மீது சிறுவரை அமர்த்தி

தாதி ஒருபுறமும் தன் சேனை இரு புறமும்
வெஞ்ஞாமரமெடுத்து மேனியில் வீசியல்லோ
ரகுகுல மன்னருடன் ராஜரும் தானமர்ந்து
அண்ணர் இருவரையும் அன்புடனே நோக்கியல்லோ
மைந்தர் முகம் நோக்கி மந்திரிக்கு கூறலுற்றார்
இளவரசுபட்டமதை இச்சிறுவருக்கு சூட்டுமென்றார்
பட்டத்தை சூட்டுமடா பாலர் இருவருக்கும்
பச்சையால் தானிழைத்த படிகமணி முடிதன்னை
சூட்டு இருவருக்கும் சூழ்ந்தார் சமணர்களும்
ஜெயஜெய வென்றுமே ஜெயபேரிகை முழங்க
அண்ணரிருவரையும் ஆனைமேலேற்றி யல்லோ
ஆனை அசையுதுபார் அண்ணர் படைதுடர
கருவி அசையுது பார் கன்னிமார் பின்துடர
முப்பத்திரண்டு வாத்தியம் முழங்கவே கஞ்சநகர்
வேதம் முழங்கிடவே வேணம்பேர் பின்துடர
வெள்ளாட்டி மங்கையரும் விரிவாக சூழ்ந்துவர
அமணருட தேவியெல்லாம் அணிஅணியாய் வீதியிலே
கைம்மாறு தான்செய்ய காரணம் தானறிய
வீதிக்கு வீதியண்ண வேந்தர்வரும் வழியிலே
கற்பூர ஆலாத்தி கன்னியரும் தானெடுத்து
முத்தாலே ஆலாத்தி முன்னரே தானடக்க
ஆனையிட சேனையுடன் அலங்கமும் தான் நடந்து
குமணநந்தி வாத்தியாயர் குருக்களிடம் தானிறங்கி
அண்ணரையும் குந்தவைத்து அறிக்கையிட்டு வாத்தியாரும்
ஓதினன் குமுணநந்தி வுள்கொண்டார் அண்ணமாரும்
எடுத்துரைக்க அண்ணருக்கு இடிவிழுந்தான் வாத்தியாரும்
பட்டிகள் சந்தனமும் பரிசளித்தான் ரகுகுலனும்
பட்டுபீதாம்பரமும் பரிசளித்தான் குருவுக்கு
ஆனையிலேறி அண்ணர் அரண்மனை வந்தடைந்தார்
சர்க்கரை கல்கண்டு தானளித்தாள் சங்குவதி
அறுசுவை அமுதுகளும் அன்புடனே. தானளித்தால்
அன்றுமுதல் அண்ணரும் அடைந்தனரே கல்வியில்
விரகெடுத்து வில்வளைத்து விளையாட்டு ஆடலுற்றார்
ஆறுவது ஆண்டு ஆச்சுது அண்ணருக்கு

அநேக ஆட்டங்களை ஆடிட தானறிந்தார்
ஏழாவ தாண்டிலே ஏதுசெய்தார் பாலருமே
வந்தாட்டம் முடிக்க பாலரும் ஆடலுற்ருர்
மல்யுத்தப்பயிற்சி மன்னரும் செய்யலுற்ருர்
கண்டு சமணர்களும் கருத்தினில் ஆசைவைத்தார்
எட்டாவதாண்டு இனிதுடன் தான் பிறக்க
எட்டாம் ஆண்டிலே எதிர்த்துப்போர் புரிவாரென்று
பண்டிதர் மொழிக்கிணங்க பாலர்களும் ஏதுசெய்தார்

உமையவள் காளிரூபங் கொண்டது.

மலையரையர் வீதியிலே வளர்ந்துவரும் மாதகியும்
வந்துவெகு நாளாச்சு மைந்தரையும் காணனுமே
தெருவில் விளையாடும் தேவியரும் ஏதுசெய்தாள்
கங்கைக் கரையிலே கன்னியரும் வந்துநின்று
காளிரூபம் எடுத்து கடுக ஓடிவந்து
ஜம்போட ஜலந்தனிலே சார்ந்திருக்கும் பசுக்களை
பசுக் கூட்டத்திலே பார்வதியாளும் சென்று
ஆவினங்களை அங்கே அடித்து துரத்தலுற்ருள்
ஆட்டிடையர் மாட்டிடையர் அரியாச்சிறுவருமே
காளி ரூபமாகக் கண்டு சிறுவரவர்
கவிழ்ந்தார் நிலமதிலே காளையரெல்லோரும்
காளிகா ரூபம்விட்டு கன்னியரும் தானமர
மலையரைய வீட்டிலேதான் வந்தமர்ந்தாள் அம்மையரும்
ஆவின் நிறை மேய்க்கும் அறியாச் சிறுவருமே
கண்விழித்து பார்க்கையிலே காரும்பசு கூட்டமெல்லாம்
காணுமல் இடையரெல்லாம் கதறி புலம்பலுற்ருள்
காடுமலை கடந்து காரும்பசு கூட்டமெல்லாம்
மடக்கியே இருவருமே மந்தையாக கூட்டியல்லோ
மூன்று பசு காணுது முறையிட்டார் இடையரெல்லாம்
அன்றிரவு தங்கி அரசனிடம் முறையிடவும்
அழுகையை கேட்டல்லவோ அரசனும் யேதுசெய்தான்
நீர்குடிக்கும் ஆவுகளை நீலிபோல் வந்துதோன்றி
ஆவுகளையெல்லாம் அடித்து துறத்திவிட்டார்
கண்விழித்து பார்க்கையிலே காராம்பசு கூட்டமெல்லாம்

காணுமலே தேடி காடுமலை திரிந்து
மூன்று பசு காணுது முறையிட்டோம் வந்தனுக்கு
மந்திரியை அழைத்து மன்னனுமப்போது
இடையரை தானழைத்து ஏகினன் வீதிதோறும்
தோப்பு துரவுகளும் துரிதமாய் தேடிவந்து
நாலு திசைகளெல்லாம் நலமுடனே தேடிவர
தெருவில் விளையாடும் தேவியரை தானறிந்து
காட்டினில் விட்டதொரு கன்னி இவளென்றறிந்து
இடையருடனே இல்லறத்திற்கேகி
அடியர் மூல்யமாய் அரிக்கையிட்டான் அரசனவன்
காட்டினில் விட்டதொரு கன்னிகையை அங்கு கண்டேன்
மலையரையர் வீதியிலே மங்கையர் ஆடக்கண்டேன்
எல்லையிலிருந்தாளானுல் இக்கட்டு வந்திடுமே
ஜாதகன் மொழியது சரியாக வாய்த்திடுமே
உரைத்தமொழி கேட்டு மந்திரி உருகி மனம் வாடி
அடியவன் மூல்யமாக அர்க்காடு செய்யலுற்றுன்
மலையரிடம் சென்று மந்திரி யுரைத்ததுபோல்
நாளைய தினத்திலேதான் நீங்கள் நடக்கவேணும் எல்லைவிட்டு
போகாமல் இருந்தீரானுல் போருக்கு வந்திடுவோம்
அடித்து துரத்திடுவோம் அவமானம் செய்திடுவோம்
என்றுரைக்க மலையரையர் ஏங்கி மனம் வாடி
அழுதுபுலம்பலுற்றுர் ஆருத்துயருடனே
ஊணுரக்க மில்லாது ஓலமிட்டு அன்றிரவு
மலையரைய தேவிகளும் மண்ணில் புரண்டழுது
வெள்ளிமுளைக்க விடிய ஐந்து நாழிகையில்
கட்டினுர் மூட்டையது கடும்பயணம் தான்வைக்க
இருக்குமந்த வேளையிலே ஈஸ்வரியாள் ஏது செய்தாள்
அழுது புலம்புவதேன் அப்பா நீர் சொல்லுமையா
மலையரையர் சொல்லலுற்றுர் மாது சிரோன்மணிக்கு
உன்னை காட்டினில் எடுத்து கட்டழகியே வளர்த்தோம்
பொல்லா சமணர்களும் பொருமை கொண்டார்கள்
இன்றைக்கிருப்போமானுல் எதிர்த்திடுவார் போருக்குமே
சொன்னமொழி கேட்டு சுந்தரியாள். தானெழுந்து
கங்கைக் கரைதனிலே கன்னியரும் தான் சென்று

பொய்கையிலே குளித்து பூஜைகளை தான்முடித்து
ஈசரை துதித்து மங்கே ஈஸ்வரியாள் தானிருக்க
பார்வதியாள் உள்ளறிய பரமனார் தானிறங்கி
வெண்புரவி பட்டாவும் வேண்டியதை அளித்து
மறையும் இடந்தனிலே மறையப் புரவிகளும்
வருகும் இடந்தனிலே வந்தமர அருளும் செய்து
பார்வதிக்களித்து பரமனும் கைலைஏக
வெண்புரவி மீதிலேறி மெல்லியரும் வீதிவர
குழந்தையைக் காணாது கூறிநின்ற மலையரையர்
அம்மையைக் கண்டல்லோ அன்பரும் ஓடிவந்து
பெண்ணென்று தானறிந்து பேதையரும் தந்து
உன் பெருமையை யாமறியோம் பேதைகள் தான்வணங்க
கன்னியரும் தான் இரங்கி காளையர்க்கும் ஆசி கூறி
பெண்படையாக நீரும் பின்பற்றி வாருமென்று
மலையரைய மைந்தர்களை மாதாவுந் தானழைக்க
நடந்து ஏரிக்கரையில் நாயகியும் தானமர்ந்தாள்

சமணர்கள் மலையரையர் மீது போருக்கேகல்.

அருகன் உதயமானன் அரிந்தார் சமணர்களும்
அக்கரை தானனுப்பி அரியலுற்று மலையரையர்
கூட்டத்தைதான் திரட்டி குழந்தை இருவரையும்
படைக்கு தலைவராக பாலரையும் தானமர்த்தி
மலையரையரை எதிர்க்க வருகையிலே சமணர்களும்
கரிந்தூளெழும்புது பார் கதிரோனை கப்புதுபார்
எழுந்து சமணர்படை இல்லாத ஆவேசத்துடன்
இருளும் கப்பியதுபோல் ஏகவே படைகளுமே
உமையவளும் தானறிந்து உற்றுமே நோக்கவே
ஏரிக்கு உட்புறத்தில் எழுந்திருந்த படைகளெல்லாம்
முன்துடர்ந்த வீரரையும் உமையவளும் தானறிந்து
பஞ்சாக்ஷரம் தானெடுத்து பாலர்மேல் தாவினளாம்
சமண இருள் நீங்கி பாலர் சக்தியை நோக்கலுற்றார்
அன்னையைக் கண்டல்லோ அடிபணிந்து இருவருமே
அழைத்ததொரு காரணம் அம்மையே சொல்லுமம்மா
அமணர் சமணர்களை அதஞ்செய்ய மூவருமாய்

அவதாரம் செய்து வந்தோம் அடியோடே தானொழித்து
அரனுடைய திருவடியை அடைவோம் யெனவுரைத்தாள்
முக்கால் வலம் வந்து முடிவணங்கி தெண்டனிட்டு

விருத்தம்.

உமையவ ளுரைத்ததோர் மொழிதனைக் கேட்டிருவர்
உக்ரவீ ரதிபராகி
உதட்டியே பற்களைக் கடித்திருவ ரோடினர்
ஓலமிடு மமணர் முன்னே
அமைத்தியே சமணரை வாளாயுதத்தினல்
அறிஞ்சியே பூமிதள்ளி
அலறியே அமணர்கள் வெருண்டிட இருவரும்
அண்ணமார் வளைந்துவந்து
தமையனைக் கண்காட்டி வஞ்சரை நோக்கியே
சாடினர் படைகளெல்லாம்
சாய் உதிரமெங்குமே குபீர் குபீரெனவோட
தலைகளுருமுருளக்கண்டு
இமைநொடியி லமணரை அதஞ்செய்த அண்ணமார்
இகலதனை யென்ன சொல்வேன்
இமையன் மகள் குஞ்சரத்தை மீன்றதோர் அம்மையே
என் அண்ணன் சின்னண்ணன் துரையே.

அண்ணமார் சமணர் படைமேல் ஏகுவது.

வெண்புரவி பட்டாவும் வேந்தருக்கு தான் தருக
புரவியின் மீதேரி புறப்பட்டார் போர்க் கோலம்
உக்ரமித்து கொக்கரித்து அமணரின் மேல் சீரிவிழ்ந்து
பிட்டாவை தானெடுத்து பதைக்கவுயிர் வாங்கலுற்ருள்
வாளாயுதத்தாலே வகுத்தார் சமணரையும்
ஈட்டியை தானெடுத்து இருக்கினர் சமணரையும்
இரத்தார் பெருகு தங்கே இரக்களம் ஆகுதங்கே
உதிரார் பெருக்குதங்கே உருளுதைய்யா சமணர்தலை
காக்கை கழுகுமுதல் கவ்வுதுபார் அவ்விடமே
கஞ்சகிரி நகரதுக்கு காளையரும் வுற்றுழைந்து
அங்குள்ள சமணர்களை அடித்து மடக்கையிலே
அலங்கத்தின் மேலிருந்த அரிவையரும் தானறிந்து

நாம் வளர்த்த காளையது நம்மை அதஞ் செய்ய காலம்
நேர்ந்துதே என்று எண்ணி நெடுமூச்சிட சங்குவதி
கமலாங்கினி யென்றமொனி கடவுளரும் தானழைக்க
ஈஸ்வரர் தானழைக்க இருளது விட்டு மங்கை
பரமனை கண்டரிந்து பரகதியும் தானடைந்தாள்
காளை இருவருமே கடந்துமே அன்னையிடம்
ஆற்றிலே ஸ்நானம் செய்து அம்மையை வணங்கி நின்று
எந்த நாடு போவதென இளைஞரும் கேழ்க்கலுற்றார்
மலையரையர் மைந்தர்களை மன்னர் பதி மூவருமாய்
சத்தியரும் தானழைத்து தன் நகரம் வீட்டு நீங்கி
ஆரண்யம் தான் நடந்து அநேக நகாங்கடந்து
பல்லவராஜனுடைய கையில் பட்டணத்தை வகுகையில்
கெடிலீாற்றுக் கரை யோரம் கிட்டினர் அண்ணர்களும்
மூங்கிரி மரத்தடியில் மூவரும் தானிரங்கி
படியாம் படித்துரையாம் பதினாறுகால் மண்டபமாம்
சமணரிடதே விகளும் ஸ்நானம் செய்யும் தன்னிடம்
அரிந்தார் அரிவையரும் அண்ணரிட கூட்டத்தை
கடுக நடந்து ஓடி கணவருக்கு தானுரைத்தாள்
சடையனிட கூட்டத்தார் ஸ்நானம் செய்யும் தன் அருகில்
அமர்ந்திருங்க கண்டோம் அய்யா அரனிட அடியவரை
அமணருங் கோபங்கொண்டு அரசனுக் கறிக்கையிட
அடித்து துரத்து மோடா அடியவரை தானனுப்பி
எழுந்தது சேனை அங்கே இருளடைந்த மேகம்போல
நித்திரைகள் செய்திருந்த நீலவர்ண காளைகளும்
இரைச்சலிட்ட சமணர் கூச்சல் இருவரும் தானரிந்து
ஓங்காரம் கொண்டல்லோ திடிரென்று கிளம்பி அங்கு
சமணரிட கூட்டத்திலே அருகனைப்போல் தானுதித்து
பட்டாவை கரத்திலேந்தி படைகளை தான் வதைத்து
வீசுக்கு ஆயிரம் பேர் விழுந்தார் சமணரெல்லாம்
அபயகுரா விட்டல்லவோ அலருகின்ற சமணர்கள்
சின்னண்ணன் தானரிந்து சிருவர்களை தான் மடக்கி
தூக்கி அடித்தாராம் துடைவேறு தான்சிதர
பல்லவராயனிட பட்டிணத்தை நடந்து
அடித்துமடக்கையிலே அரசனவன் தானரிந்து

காலில் விழுந்துமே கார்க்கவே வேணு மென்றான்
அங்கரம் விட்டுமன்னர் அடைந்தார் நதிக்கரையில்
வீரட்டானம் ஈஸ்வரரை விமலியுடன் தெரிசித்துமே
பண்ரொட்டி வீதியாக பாலர் பதிமூவருடன்
மன்னரிட வீதிவிட்டு மலையரையர் தான்றுடர
தெற்கே கடந்தல்லோ தெருக்கோடி தன்னருகில்
மல்லி வனங்களுண்டு மாதளம்பு தோப்புமுண்டு
அந்த வனந்தனிலே அன்றிரவு தங்கினராம்
நஞ்சருத்து நஞ்சிடும் நடுஜாமவேளையிலே
பண்ரொட்டி எல்லைவிட்டு பார்வதியாள் பாலருடன்
அநேக வனங்கடந்து ஆரண்யம் தான்நடந்து
பட்டிநல்ல நகரைவிட்டு பலதேசம் தானடந்து

பெரும்பயர் ஆரண்யம் கள்வர் யுத்தம்.

பெரும்பயர் ஆரண்யத்தில் பேரழகர் வருகையிலே
கள்ளர் மரவர்களும் கானகத்தில் வாழ்ந்திருக்கும்
இருளர் மரவராமே இருள் சூழ்ந்த குரவாரமே
அண்ணர் அணிந்திருக்கு ஆபரணம் தான் பிடுங்க
கல்களும் எரிந்தாராம் கன்னியரும் தானறிந்து
மலையரைய மைந்தர் மீதில் மரவர் எரிந்தக் கல்லை
உற்று நோக்கி அண்ணரும் குரிப்பறிந்து ஏது செய்தார்
கல்கள்வரும் தன் குரியை காளையரும் கண்டறிந்து
பூமியை தான் வகுந்து பீஜாக்ஷரம் அட்சரத்தை
மலையரைய மைந்தருடன் மாதேவியை அங்கமர்த்தி
பத்திரப் படுத்திவிட்டு பாய்ந்துமே கள்ளர்களை
வாளாயுதத்தாலே வகுந்தாரே கள்ளர்களை
அலரி கள்ளரங்கே ஆரண்ணியத்தினுள்ளே
கள்ளரை கறுவருத்து கன்னியரிடமும் வந்து
காட்டுக்கனிவர்க்கம் காளையரும் தான் பரிந்து
அநேக நகரம் விட்டு ஆறு சுனைக் கடந்து
நஞ்சை நிலம் புஞ்சை நிலம் நகரமது கடந்து
ஆரூர் பதியிலே தான் அமர்ந்தாராம் பதியிலே
பாலாற்றுக் கரையோரம் பாலருடன் உமையவளும்
மலையரைய மைந்தருடன் மங்கைப்பதி மூவருடன்

அன்றிரவு அங்கிருந்து அரன்பூசை தான்முடித்து
காட்டு கனிவர்க்கம் காலைமுதல் தான்புசித்து
அன்றிரவு கிளம்பி ஆற்றங்கரையோரத்தில்
திம்மாவரம் வழியாய் சிறுவர்களும் தான்வருக
புலியூரு தங்நகரம் புகுந்தார் மலையருகில்
சந்தியப்பன் ஆலயத்தில் தங்கினர் அன்றுபகல்
அர்த்தஇரவு வேளையில் அங்நகர் விட்டேகி
நதியாம் நதிக்கரையாம் நாலுவித தோப்புகடந்து
ஆகாயமளாவி நிற்கும் அதிககிரியை விட்டு
ஈ நுழையா காட்டுக்குள்ளே இருண்டவனம் வந்து

மன்னிவாக்கம் ஆரண்யம் கள்ளர் யுத்தம்.

மன்னிவாக்கம் கானகத்தில் மன்னரும் தானுழைய
மலைதனிலே வாழுமந்த மலைக்குரவர் தானறிந்து
இரும்புத் தடியுடனே இருளரும் தானெதிர்க்க
அண்ணரையும் கிட்டி அடித்தார் மலையரையும்
ஆக்கரித்து கொக்கரித்து ஆரண்ய கள்ளர்மீதில்
கொக்கரித்து ரகுளிகொண்டு குதித்துமே கள்ளர்மீதில்
மண்டியிட்டு நின்று மடித்தாரே கள்ளர்களை
வீரிட்டார் கள்ளரங்கே விரிவுள்ள இருளரங்கே
ஆரண்யம் முழுதும் அடித்துத் துரத்திவர
மலட்டாறு ஓடையண்டை மடித்தாராம் கள்வர்களை
ஆற்றிலே குளித்து அடிபணிந்து அம்மையாரை
அங்நாடுவிட்டு இருவர் அடர்வனம் தான் நடந்து
முல்லைவனங் கடந்து மூங்கில்புதர் தோப்புவிட்டு
மல்லிவனங் கடந்து மாதுளம்பூ தோப்பைவிட்டு
நச்சுப்பொய்கை யுண்டாம் நாகமரம் தோப்புவுண்டாம்
கொட்டி படர்ந்திருக்கும் கோடைநகர் வந்தடைந்து
கள்ளரிடம் எதிர்த்தபாதை கஷ்டங்களைத் தீர்க்கலுற்றார்
அன்றுபகல் அங்கிருந்து அன்றிரவு கிளம்பியல்லோ
அநேகம் பதிநடந்து அரரிட நாடுவிட்டு
தெருவாம் தெருநடந்து தென்னஞ்சோலை தான்நடந்து
ஒற்றியூர் தான் நடந்து வுத்தமரும் எங்களண்ணர்
மாவிருக்ஷம் தன்னடியில் மன்னர் பதிமூவருடன்

அமர்ந்திடும் வேளையிலே அர்ச்சக னொருவனங்கே
வேதியர் வந்துநின்று விபரம் கேட்கலுற்றார்
எந்தவூர் எந்தநாடு இங்குவந்த சேதியென்ன
வெய்யலிலும் கானலிலும் வேந்தரை தானழைத்து
தெற்கே வெகுதூரம் தென்னாடு சீமையது
வடதிசை ஏக நாங்கள் வந்தோமே இவ்வழியாய்
கானலிலே காளையரே கட்டழகி இங்கிருக்க
ஆளனில்லா பாவியம்மா அரண்மனை வாருமென்றான்
பிள்ளையில்லா பாவிநானே பேரழகி வாங்களம்மா
அர்ச்சகன் அன்பினாலே அரிவையரும் சென்றமர்ந்தாள்
மூன்றுநாள் அங்கிருந்து நான்காம்நாள் காலையிலே
வேதியனிடம் சென்று வேந்தரும் ஏதுரைப்பாள்
அந்தணரை நோக்கி அரிவையரும் சிலவுகேட்க
வடதிசை ஏகிநாங்கள் வருவோமே இவ்வழியே
அரிந்த அந்தணரும் அம்மை மொழியை அறிந்து

வேதியன் வடதிசை பெருமை யுரைப்பது.

வடதிசை பொல்லாது வழிசென்றோர் வாராரம்மா
பொல்லா வடதேசம் போனால் திரும்பமாட்டார்
தெலுங்கருடை சீமையம்மா தேத்தரசன் தன் நகரம்
கடுகருடை சீமையம்மா மரடர்கள் மெத்தவுண்டு
துலுக்கருடை சீமையம்மா துடுக்கர்கள் மெத்தவுண்டு
புத்தருடை சீமையம்மா புனல்வாதம் மெத்தவுண்டு
பௌத்தருடை சீமையம்மா பாரவனம் மெத்தவுண்டு
காடுமலைகளுண்டு கள்ளர்க ளதிகமுண்டு
ஆறுசுனைக ளுண்டு அடர்வனம் மெத்தவுண்டு
எரி குளங்களுண்டு எரிமலை மெத்தவுண்டு
புழுதி நிலங்களம்மா பூமிவெடிப்பு வுண்டு
நஞ்சை நிலங்களுண்டு நாகரீக முள்ளாரம்மா
வேலம் புதருண்டு வெய்யிலும் மெத்தவுண்டு
தானம் கிடையாதம்மா தண்மையை நோக்காரம்மா
பரிதாபம் கிடையாது பாவிகள் பட்டிணத்தில்
பசித்தவருக் கன்னமம்மா பாருலகில் கிட்டாது
புசிப்போர்க்கு ஆகாரம் புரக்கணிக்கும் தன்னகரம்
அன்ன சத்திரங்கள் அருமையம்மா அவ்விடத்தில்

அரிதேசி பரதேசி அரிது அரிதம்மா
அறியாச்சிறு பாலருடன் அன்னகரம் செல்லுவது,
தடுத்துமே எகினலோ் தவகுணங்கள் வந்தணுகும்
மலையரைய மைந்தர்களும் மடிந்திடுவார் அங்கரம்
சித்திரை மாதமம்மா கத்திரிகோடையிலே
வெய்யலிலும் கானலிலும் வேந்தரை தானழைத்து
போகாதே போகாதென பொன்னடியை தான் வணங்க
அந்தவுரை கேட்டு அறிந்தாள் சிலமொழிகள்
வடதேசம் சென்றுதான் வருவோமே புன்னகரம்
வுரைத்த மொழியதுகேட்டு வுத்தம வேதியரும்
அட்டியென்னும் அடுப்பில் அரிசியை எற்றினனும்
நாழுழி அரிதியிட்டு நடப்பவர்க்கு தானளிக்க
வெண்சீலை தானெடுத்து வேதியனும் வாட்டமுடன்
கட்டி எடுத்துமே கன்னியுடன் பின்தொடர்ந்தான்
அம்மணி அம்மணியே ஆக்ரகிக்க வேதியனும்
அந்தக்குரல் அறிந்து அம்மையரும் நோக்கலுற்றாள்

வேதியன் கட்டமுது அளிப்பது.

கட்டமுதை தானளித்து கடந்தானும் வேதியனும்
அனைவருந்தான் நடந்து அநேக வனங்கடந்து
ஈசம்புதருமுண்டு இருபுறம் வேலங்காடு
காடுமுரடு பாதை கடந்து அண்ணமாரும்
செடிகள் கடந்து வந்து சேர்க்காடு வந்தடைந்தார்
வெய்யில் உரைக்குதுபார் வேந்தரும் தான் துடிக்க
ஆறும் பெருமணலாம் அண்ணர்வரும் வழியில்
மாந்தோப்பு பிலாத்தோப்பு மகாதேவர் தான்கடந்து
வாழை கமுகுடனே மலட்டாரை வந்தடைந்தார்
மலையரைய மைந்தர்களும் வாங்கி ஜலம் பானம் செய்து
ஆலமரத்தடியில் அண்ணரும் உமையவளும்
அங்குசில நேரம் அரைநேரம் தங்கிருந்து
அங்கிருந்து தானெழுந்து ஆரண்யம் தான் புகுந்து
வேங்கைமரம் தோப்புவிட்டு வெடியுண்ட பூமிவந்தார்
காரல் புதைகளுண்டு காட்டு பூமியைக் கடந்தார்
புஞ்சை நிலங்கடந்து புழுதிநிலம் தாண்டிவந்து

உச்சி ஒருபொழுதாம் ஒருஜாம வேளையிலே
கானலுரைக்குதுபார் காக்குது மேனியெல்லாம்
நாக்கை வரட்டுதாமே ராஜர்பதி மூவருக்கும்
அறிந்த உமையவளும் அண்ணமார்கள் துரையும்
அன்னையை நோக்கி மன்னர் அருந்தவம் நீரளிக்க
வாருபிடா மைந்தரென வடிவழகி தானழைத்து
பனந்தோப்பு சாலையிலே பார்வதியாள் வந்து நின்றாள்
ஆட்டை மடக்கிமன்னர் அம்மரத்தில் தூங்கிருக்க
இருவரை தானறிந்து எழுப்பினாள் சிறுவரையும்
ஆடுமேய்க்கும் பாலரே அறியாச் சிறுவரே
தண்ணீர் கிடைக்குமோ தாகவிடாய் தீருதற்கு
அம்மாவோ அம்மாவோ ஆலமரம் தோணுதுபார்
அந்த விருக்ஷம்விட்டு அடுத்தபதி போகையிலே
தண்ணீர் தடாகமுண்டு தாமரை பொய்கையுண்டு
நல்ல ஜனங்களுண்டு நாகரீக பொய்கையுண்டு
அந்தணர் வீதியுண்டு அரசர் வீதி மெத்தவுண்டு
உண்பதற்கு சாதமம்மா உங்களுக்கு கிடைக்கும்
கொஞ்சம் துலவுதானே கூப்பிடும் தூரந்தாயே
அந்தப் பதியைவிட்டு அடற்காற்று வெய்யலிலே
ஏகி நடந்தார்கள் எல்லையை தான் கடந்தார்
ஆட்டிடையர் உரைத்த அடர்ந்த நதியை வந்தார்
நதியாம் நதிக்கரையாம் நாலுவித தோப்புகளாம்
நச்சுப் பொய்கைவுண்டு நந்தவனம் தோப்புமுண்டு
தண்ணீர் தடாகமுண்டு தாமரை பொய்கையுண்டு
ஏரிக்கரைகளுண்டு யவ்வர்ண சாலைகளுண்டு
அந்த இடந்தனிலே அமர்ந்தார் அனைவருமாய்
விச்சூர்பதிதனிலே விமலியும் வந்தடைந்தாள்
வைகையில் ஸ்நானம் செய்து வடிவத்தை தான்துடைத்து
வேதியர் தானளித்த வெண்சாத மூட்டையதை
நதிக்கரை தன்னருகில் நாயகியும் தானவிழக்க
கரிசுவை இல்லையென்று காளையர்க்கு தானுரைக்க
அரி சுவை இல்லையென அரிவையரும் தானுரைக்க
நாங்கள் ஊரையடைந்து தாயே உரிச்சுவை கொண்டுவாரேன்
நாட்டையடைந்து அம்மா நல்ல சுவை கொண்டு வாரேன்

உத்திரவு பெற்று ஓடினர் இருவருமாய்
அந்தணர் வீதி கடந்து அரசர் வீதிநடந்து
வேளாளர் வீதி நடந்து வேல்நம்பி வீதிவிட்டு
வணிகருட வீதியிலே வாராரே அண்ணமாரும்
மண்மேடு இட்டிருந்த மலைமேட்டை தானரிந்தார்
குண்மேடு இட்டிருந்த குகைமேட்டை தானரிந்தார்
வன்னியர் வீதியிலே வடிவழகர் தான் திரும்ப
அரசன் மரத்தடியில் ஆழியை தானறிந்தார்

அண்ணமார் செல்லி அம்மன் இடம் அருசுவை பெற்றது.

வயது சென்ற கிழவியை வடிவழகர் தானரிந்து
அந்த மரத்தடியில் அண்ணரவர், வகையிலே
ஓடிக்கதவடைத்து உள்பூட்டு தாளமிட்டு
சரத்திக்கதவடைத்து தாள்போட்டு உள்ளிருந்தாள்
ஆரம்மா உள்ளே நீ அரையை திறக்கவேண்டும்
ஏவரம்மா ஆலயத்தில் இக்கதவைதான் திரப்பாய்
ஊரு ஒழிந்ததென்ன நீ ஒளித்து இருப்பதென்ன
நாடுஅழிந்ததென்ன நீ ஒளித்து இருப்பதென்ன
நாடு அழிந்துதென்ன நாயகி ஒளிப்பதென்ன
உள்ளதை சொல்லாவிடில் உடைவாளால் வீசிடுவேன்
கதவை திறந்துமல்லோ கட்டழகி சொல்லுமம்மா
கண்டிருந்த செல்லியரும் காலமொழி தானரிந்து
கதவைத் திறந்துமெள்ள கட்டழகி வந்து நின்று
எந்தவூர் எந்தநாடு இங்குவந்த சேதியென்ன
யென் தங்கையிட தூதரென்று சாற்றினேன் நான் கதவை
பொன்னியின் தூதரென்று புகுந்தேனே ஆலயமும்
ஆருடைய புத்திரரோ அவனியில் வந்துதென்ன
தெற்கே வெகுதூரமம்மா தென்னாடு சீமையம்மா
கஞ்சகிரி தங்கரம் கடந்துவந்த சீமையம்மா
அன்னையுடன் மூவருந்தான் துடர்ந்துவந்த மலையரையர்
வடதிசை.ஏக நாங்கள் வந்தோமே இந்நகரம்
அரிச்சுவைக்காக வேண்டி அரிவையரே இங்குவந்தேன்
ஊரையும் சுற்றி வந்தேன் ஒரு சிற்றடியும் காணவில்லை
வடமுகம் நோக்கியே வல்லவியே உன்னைக் கண்டேன்

சிறுவருரைத்தமொழி செல்லியரும் தானறிந்து
தங்கை ஒருத்தி மைந்தா தவத்தில் பெரியவளே
சமணரிட எல்லையிலே தங்கிடுவாள் தங்கையரும்
வெள்ளிவாயல் எல்லையிலே வீற்றிருப்பாள் தங்கையரும்
தேரும் திருவிழாவும் இத்திசையுள்ள தானடக்க
பத்துநாள் திருவிழா பாலரும் தான் முடிப்பார்
பொறாமைகொண்டு தங்கை போர்மன்னர் மீதிலேதான்
கங்கைநதியிலே தான் கரைத்தால் மந்திரத்தை
நச்சுதலைநோயும் நையாண்டி காச்சலுமாய்
நாளுக்கு நாள் நாசம் செய்தார் இந்நகரம்
யென்னையும் வெல்வதற்கு ஏகிவாரார் அனுதினமும்
அவளுடைய தூதரென்று அஞ்சினேன் மைந்தர்களே
அண்ணரவர் தானறிந்து அருசுவை கேட்கலுற்றார்
கரிசுவை தாருமம்மா கவலையை நான் ஒழிப்பேன்
அருசுவைப் பெற்று அண்ணர் அம்பிகை தன்னிடத்தில்
நடந்த விஷயமெல்லாம் நாயகிக்கு தானுரைத்தார்
மலையரைய மைந்தருடன் மாதேவி தான்புசித்து
உண்டு பசியாறி உலகமாதா மைந்தருடன்
செல்லியுடைய ஆயைத்தை சேர்ந்தாரனைவரும்
அன்னையரும் செல்லியரும் அமர்ந்தார் பீடமீது
கதவை திறந்தார்கள் காளை இருவரும்
வாயர்படி யருகில் வாளாயுதம் தான்பிடித்து
பாட்டாவை தான்பிடித்து பாலகரும் தானிருந்தார்
அப்போது பொன்னியரும் ஆங்கார கோபமுடன்
ஆக்கரித்து கொக்கரித்து ஆலயத்தில் தான்புகுந்தாள்
அண்ணரிருவரும் அதிவீரதீரராகி
வாளாயுதம் தானெடுத்து வகுத்தார் புஜமிரண்டும்
மார்க்கால் மார்க்கை வாங்கினர் அண்ணர்களும்
மண்ணில் விழுந்து மறலியிடம் தான்சேர்ந்தாள்
மைந்தர் இருவரையும் மாரோடு தானணைத்து
செல்லியரும் ஓடிவந்து சிறுவரை முத்தமிட்டு
என் ஆபத்தைத் தீர்த்ததினால் இந்த அவனியில் நீங்கள் இருந்து
தங்கின எரிக்கரை தரிப்பாரிருவர்களும்
முதல்பூஜை உங்களுக்கு முறைப்படி நான் தருவேன்

பின்பூஜை நான்பெருவேன் பெருமையுட னமர்ந்திருப்பாய்
செல்லியம்மன் தானுரைத்த சிறுமொழியை தானறிந்து
தாயார் உலகமாதா தவமழகி ஏதுரைத்தாள்
நல்லது தங்கையரே நான்செய்வேன் அப்படியே
ஆருதலை சொல்லி அடிமைகளைத் தானழைத்து
வெள்ளிநகர மீதில் வேந்தர்களை தானனுப்ப
கட்டளையிட்டு அம்மன் காளையர்களைத் தானனுப்ப
அடைந்தார்கள் வெள்ளிவாயில் அண்ணரிருவரும்
காளையிருவரையும் கண்டார்கள் சமணர்கள்
அடித்து துரத்துவதற்கு ஆடம்பரம் தான்புரிந்தார்
அண்ணரும் கர்ஜித்து அமணர்மீது தான்விழுந்து
வாளாயுதம் தானெடுத்து வகுத்தார் சமணரையெல்லாம்
அபய குறலிட்டு அலறினார் சமணரெல்லாம்
பின்தொடர்ந்து சென்று மைந்தர் பிடித்தார் அமணரை
அடித்தார் அண்ணரவர் அலருதுபார் பாளையமெல்லாம்
கரிந்தூள் எழும்புதுபார் கதிரோனை கப்புதுபார்
செந்தூள் எழும்புதுபார் சூரியனை கப்புதுபார்
கொடுதலை ஆற்றோரம் குதிரையை தான் திருப்பி
தட்டினார் மட்டமதை அனலாய் பறக்குதுபார்
ஜம்போடை நதிக்கரையை தாவுதுபார் மட்டமது
ஆழிக்கரையோரம் அண்ணரும் வந்திறங்கி
ஆழியை தாண்டார் அரும்பாவி சமணர்கள்
பட்டாவை தானலம்பி பாசினார் தோனிதனில்
புழுதுவாக்கம் தானடைந்து புறப்பட்டார் அண்ணரிருவர்
எண்ணூரை தான்கடந்து ஏகினார் மைந்தரிருவரும்
எர்ணாவூர் பாதையில் நிறுத்தினார் மட்டமதை
மட்டத்தை விட்டிறங்கி மைந்தரும் ஸ்நானம் செய்தார்
இளைப்பாரி யிருவரும் ஏறினார் புறவிதனில்
காட்டுப்பொன்னி கோயில்வீதி காளையரும் தான்வருக
அந்த பதிகடந்து அதட்டினார் புறவிதன்னை
சடையாங்குப்பம் பாதையிலே சார்ந்தாரிருவரும்
ஆட்டிடையர் வீதிதனில் அடைந்தார் இருவரும்
ஆலமரம் தோப்புண்டு அடர்ந்த நதிகளுண்டு
அந்த நதிதனில் அள்ளி ஜலம் தான்புசித்து

அந்தப் பதியைவிட்டு அடர்ந்த வனங்கடந்து
இடையஞ்சாவடி அங்கரம் இருவரும் வருகையிலே
யாரோ தெரியாத் அறியாசிறு பாலகரும்
மட்டப் புறவிதனில் மைந்தரை கண்டு அங்கே
சமணரை தானொழித்த சற்குண அண்ணலே என்று
அந்தரத்திலு ள்ளோர் அறிந்தார் சிலர்
அந்தப் பதியைவிட்டு ஆரணியம் தான் கடந்து
விச்சூர் பதிதனிலே வீரர்களும் வந்தமர்ந்தார்
அன்னையுடைய பாதத்தை அடிபணிந்தார் அண்ணரவர்
நடந்த விஷயமெல்லாம் நாயகிக்கு தானுரைத்து
வாரியெடுத்து வளம்பெருகு கையாலே
தூக்கியெடுத்து அம்மன் துடைத்தாள் முகங்களெல்லாம்
முத்தமிட்டாள் உலகமாதா முகமெல்லாம் தான் துடைத்தாள்
அண்ணரிருவரையும் அரசருடைய மைந்தரையும்
மலையரைய மைந்தருடன் மாதேவி உலகமாதா
விச்சூர் பதியைவிட்டு வீரர் பழனமானர்
செல்லியர்கண்டு அம்மன் தேவியரை தான்மடக்க
என்னைவிட்டு போவதற்கு ஏற்குமோதான் உங்களுக்கு
இந்த நகரமீதில் இருந்திட வேண்டுமம்மா
அப்படியே நான்வருவேன் அஞ்சாதே தங்கையரே
போய்வருவோ மென்றுசொல்லி புறப்பட்டா ரனைவரும்
விச்சூர் நதியைவிட்டார் மேவினர் மேல்திசையை
ஏனையநாடுவிட்டு ஏரிசுனைகடந்து
பட்டி நகர்கடந்து பலதேசம் தான்கடந்து
காஞ்சீ புரத்திலேதான் காமாக்ஷி சன்னதிலே
மாவிருக்ஷந் தனில் மங்கை தவமிருந்தாள்
சத்தி தவம்புரிய சங்கரனும் வந்திறங்கி
வேர்வை நழுவவிட்டார் விமலியுடை கைதனிலே
வலது கையில் ஏழுவீரர் இடதுகையில் ஏழு கன்னி
கன்னியரை தானறிந்து கட்டளைகள் யிட்டாள்
பூலோகம் சென்று நீங்கள் பூசைபுஷ்பம் வாங்கிடுவீர்
இஷ்டரை காத்து இன்பமுடன் வாழ்ந்திடுவர்
துஷ்டரை அடக்கு சுத்தபூசை யிட்டிடுவர்
கலியுகத்து மன்னரெல்லாம் கருத்துடனே பூசிப்பார்

வையகத்து பெண்களெல்லாம் வணங்கிடுவார் உங்களையெல்லாம்
ஏழுபேர் கன்னியராம் இறங்கினர் பூமிதன்னில்
வலதுகையில் தானுதித்த வளம்பெருகு எழுவரை
மலையரைய மைந்தரிடம் மகிழ்ச்சியுடன் தானளித்தாள்
தங்கின ஏரிக்கரை சாதித்திடுவார் எழுவரைதான்
குந்தின ஏரியில் குமாரரை நீங்களெடுத்து
ஸ்தாபிதம் படுத்திமன்ன தமயர்பதி மூவரும்
முன்பூசை தந்திடுவார் முனிவீரர் எழுவர்க்கும்
பின்பூசை தந்திடுவாய் பெற்றுக்கொள்வோம் மூவருந்தான்
அகண்ட நல்ல பூஜை அடைவோம் மூவரும்
மைந்தர்கள் பிறந்தாரானல் என் மைந்தருடைய நாமம் சூட்டும்
கன்னிகை உதித்தாலானள் காத்திடுவேன் மங்கையரை
ஆபத்துகாலத்திலே அண்ணவென்று நீ அழைத்தால்
காத்திடுவோம் மைந்தர்களை கலகம் வந்து நேரிடாமல்
இருட்டிலும் கரிக்கிலும் என்னை மறவாது
ஆண்டுக்கொருபூசை அன்புடனே போடுவாய்
நடத்துவீர் மைந்தரென்றும் நாயகியாள் தானுரைத்து
அம்மையும் அம்மையுமாய் ஆகாய மார்க்கமாய்
அடைந்தார்கள் மூவருமாய்
ஏழுபேர் விரரை யேந்தினர் மலையரையன்
காஞ்சீபுரத்தைவிட்டு காடுமலைகுன்று கடந்து
அநேகநகரம் விட்டு அடர்ந்த வனங்கடந்து
விச்சூர் பதிதனிலே வீரர் எழுவரையும் கொண்டுவந்து
தங்கின ஏரிக்கரை தன்னிடம் வந்துநின்ற
பொய்கையிலே ஸ்நானம்செய்து பூசையை தான் முடித்தார்
அண்ணர் எழுவர்க்கும் அமைத்தினர் பீடமொன்று
எழுவரையும் ஸ்தாபித்து ஏகினர் செல்லியிடம்
அடிபணிந்து அம்மனையும் அரசர்கள் நிற்கையில்
கூடத்தொடர்ந்துவந்த குழந்தைகள் எங்கே என்றுள்
நடந்த விஷயங்களை நாயகிக்குச் சொல்லலுற்றர்
ஆதி கைலாயமடைந்தார்கள் மூவரும்
அவர் அளித்ததோர் வீரரையெல்லாம் அக்கரையில் தானமர்த்தி
அன்னையிடம் வந்தோம் அரியா சிறுபாலகரம்மா
அன்றுமுதல் மலையரையர் அநுதினமும் பூசை செய்ய

ஏழுபேர் வீரருக்கு இன்பமுடன் பூசைசெய்ய
அகண்ட நல்லபூசை அண்ணருக்கு தான்தருக
வருஷமொருபூசை மறவாமல் தான்புரிந்தால்
கடவுளுடைய பூசைகளும் கலியுகத்தில் மானிடர்கள்
அங்காங்கு தேசத்தினீர் அண்ணர் பூசைதான் புரிந்தார்
மலையரையன் மைந்தர்களும் மகிழ்ச்சியுடன் தானடைந்தார்
அண்ணர் கிருபையையடைந்தவர் மெத்தவுண்டு
அண்ணருடைய யுத்தத்தில் அமைந்த நகரமுண்டு
புழுதி கிளம்பினது புழுதிவாக்க மென்றுரைப்பார்
எரடி விழுந்தயிடம் எறணூர் என்று விளங்கும்
அமணர் கருவிகள் அடைப்பட்டது தன்னகரம்
காட்டுப்புள்ளி காளாஞ்சி கருவிகள் எதிர்ந்தயிடம்
கத்தி கழுவினது கத்திவாக்க மென்று விளங்கும்
அநேக நகரமுண்டு ஆலயத்தின் தன்னருகே
அண்ணர் சரிதையை அன்புடனே கூறிவந்தேன்
உள்ளங்குளிர்ந்த சிறுவன் உணர்ந்ததை நானுரைப்பேன்
சித்தங்குளிர்ந்து சிறப்புடன் பாடி வந்தேன்
தப்புப்பிழை யிருந்தபோதிலும் தயைவைத்து காறுமண்ணு
சரணம் சரணம் மண்ணு சாச்சேன் திருமுடியை
இன்னம் சரணமய்யா இனிச்சரணம் போதுமய்யா
கோடிச்சரணம் குழந்தை உன்னை தஞ்சமென்று
அண்ணர் சரிதையை அன்புடன் வாசித்தோர்க்கும்
படித்தவர்க்கும் கேட்டவர்க்கும் பரகதிதான் தருவாய்
கார்க்கக் கடன் வுனக்கு கடவுளரே போற்றிசெய்வேன்.

Dr. J. PARTHASARATHI'S
LIBRARY

வாழ்த்து.

அண்ணர் சரிதையை அறிந்தவர்கள் தான்வாழ்க
மண்ணிலுள்ளோர் மாதர் மக்கள் தான்வாழ்க
பன்முறை படிப்பவரும் பலபேரும் தான் வாழ்க
முன்னவர் தன்கதையை முடித்தவன் தான்வாழ்க

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனுல் சகல அச்சுக்கூடத்தவர்க்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில் அண்ணமார் சரித்திரத்தை என்னுல் வெளியிடப் பட்டுள்ளன. இப்புத்தகத்தை மற்றவர்கள் அச்சிடாதபடி மகாகனம் பொருந்திய கவர்ன்மெண்டார் அவர் சட்டப்படிக்கு காப்பி ரிஜிஸ்டர் செய்து இருக்கிறேன். ஆகையால் இப்புத்தகத்தை என் அனுமதியில்லாமல் அச்சிடக் கூடாது.

இப்புத்தகம் தேவையானவர்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,
சே. சின்னப்ப நாட்டார்,
நெ. 16, அம்பட்டன் வாராவதி சாலை,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

—:o:—

வேண்டுகோள்.

சிவநேயச் செல்வர்களே!

அறுபதுநாலாயிரம் ரூபாய் தாளுமான ஷெவிச்சூர் சத்திரங்களும் ஆலயங்களும் கிலமாயிருக்கிறபடியால் புண்ணிய சீலர்கள் இதை முன்னேற்றமடையச் செய்வீர்களென எல்லாம்வல்ல உலகமாதா, பெரியண்ணன், சின்னண்ணன் திருவருளைப் பிரார்த்திக்கின்றனம்.

இப்படிக்கு,
பார்த்தசாரதி நாட்டார்.
கா. தா. முனுசாமிநாட்டார்.
ஆலய தர்மகர்த்தர்கள்.